தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு எண் 213

# நாராயண சதகம்

★
★★

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூல்நிலையம்,**
தஞ்சாவூர்.

★
★★

1985

விலை 3-50

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : [illegible]

# நாராயண சதகம்

பதிப்பாசிரியர்
பேராசிரியர் கி. கோதண்டபாணி, M. A., B. O. L.,
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
அ. வீ. வா. நினைவு திரு. புட்பம் கல்லூரி,
பூண்டி.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல்நிலையம்,
தஞ்சாவூர்.

85 ★ விலை 3-50

முதற் பதிப்பு — 1985

விலை 3-50

வெளியீடு —

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையம்,

தஞ்சாவூர்.

பதிப்பகம் :

M/s. ஜெமினி பிரிண்டிங் ஒர்க்ஸ்,

1837/1, மேலராஜவீதி,

தஞ்சாவூர்.

# பொருளடக்கம்


1. வெளியிடுவோர் உரை.
2. முகவுரை — i
3 வேண்டுகோள் — xi
4. நாராயணசதகம் — 1
5. பிற்சேர்க்கை — 45

# வெளியிடுவோர் உரை

இந்திய இலக்கியங்கள் யாவற்றிலும், நூறு பாடல்களைக் கொண்டிலங்கும் 'சதகம்' எனும் இலக்கிய வகை நூல்கள் உண்டு. அவை மிகுதியும் நீதி கூறும் முகமாய் அமைந்துள்ளன. நாராயண சதகம்' எனும் இந்நூல் பரம்பொருளைப் போற்றி, அவர்தம் பெருமையினை எடுத்தோதுகிறது.

வேதம், உபநிடதம், இதிகாசம், புராணம் ஆகியவற்றில் நாராயணனைப் பரம்பொருளாய்க் கருதி கூறப்பட்ட கருத்துக்களின் தொகுப்பாக இந்நூல் உள்ளதெனில் மிகையன்று. திருமலையப்பன் என்னும் கவிஞர் பெருமான் நல்ல இலக்கிய நடையில் எழுதியுள்ள இந்நூல் சரஸ்வதி மகால் நூலகத்தில் ஓலைச்சுவடியில் இதுகாறும் இருந்து வந்தது. பதிப்பாசிரியர் கூறுவதுபோல பல சதக நூல்கள் இன்றும் தமிழுலகம் அறியாது உள்ளன அவ்வாறு அறியாதிருந்த நூல்களில் ஒன்றான இது தற்போது அச்சாகி, அறிஞர்கள் கையில் தவழ வருகின்றது.

இந்நூலைப் பதிப்பித்து நமக்களித்தவர் பூண்டி புட்பம் கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவராக இருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் திரு கி. கோதண்டபாணி எம்., பி.ஓ எல்., அவர்கள் ஆவார். இவர் பதிப்பித்த "கஞ்சனம்மானை" என்னும் நூல் முன்பே நூலக வெளியீடாக வந்துள்ளது. சிறந்த தமிழ்ப் புலமையும், ஆராய்ச்சி அனுபவமும் உடைய இவர், இந்நூலைப் பதிப்பித்துள்ளார். எளிய இனிய உரைத்தமிழில் அனைத்து பாடல்களையும் பொழிப்புரையாக்கிக் கொடுத்துள்ளார்; அவர்தம் தொண்டு பாராட்டுக்குரியதாம், சிறந்த முறையில் இந்நூலைப் பதிப்பித்தமைக்கு நூலகத்தின் சார்பில் எமது நன்றி என்றும் அவருக்குரியது. அரிய சுவடிகளை அச்சேற்றி நூலகப் பணிக்கு பண உதவி அளித்து வரும் மத்திய அரசுக்கு நன்றி கூறப் கடப்பாடுடையேன்.

**து. இரா. இராமசாமி இ. ஆ. ப**

தஞ்சாவூர் — மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்

28—4—1985 — சரஸ்வதி மகால் நூலகம்

# முகவுரை

## ( ஆய்வுரை )

தமிழ் மொழியில் வழங்கும் தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்ததே சதகம் என்னும் இலக்கியக் கூறாகும். 'விழையும் ஒரு பொருள்மேல் ஒரு நூறாக தழைய உரைப்பது சதகம் என்ப' எனச்சதக இலக்கணத்தினை 17 ம் நூற்றாண்டில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் என்னும் புலவர் பெருந்தகை தமது இலக்கண விளக்கம் என்ற நூலில் விளக்கமாகக் கூறுகின்றார்.

### சதகம்–பெயர்க் காரணம்

சதம் என்றாலோ சதகம் என்றாலோ நூறு என்பது இவ் வடமொழிச் சொல் உணர்த்தும் பொருளாகும். 'நூறு செய்யுட் கொண்ட பிரபந்தமே சதகம் என்பர்' திரு. கதிரைவேற்பிள்ளை அவர்கள். 'சதகத் திரட்டு' என்ற பெயரில் பன்னிரண்டு சதகங்கள் அடங்கிய பதிப்பினை சென்னை இரத்தின நாயக்கர் & சன்ஸ் அவர்கள் பதிப்பாக வெளியிட்டுள்ளார்கள். இத் தொகுப்பினை திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் B. A. அவர்கள் பரிசோதித்து வெளியிட்டுள்ளார் என்ற குறிப்பும் இடம் பெற்றுள்ளது. சதக இலக்கியங்கள் தோன்றிய காலமுதல் இன்றுவரை வெளிவந்துள்ள சதகங்களின் தொகை நூற்றுஏழு ஆகும். இது பெயரளவில் மட்டுமே அறியப்படும் செய்தியாகும். ஆனால் இன்று கிடைக்கப் பெற்ற சதகங்களின் எண்ணிக்கை நாற்பத்துமூன்று ஆகும் என அறிகின்றோம். பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையில் நூலுக்குப் பெயரிடும் பழந்தமிழர் மரபினை ஒட்டியே நூறு பாடல் கொண்ட நூலினைச் சதகம் எனப் பெயரிட்டனர். இவ்வாறு எண் அடிப்படையில் புறநானூறு, அகநானூறு நாலடி நானூறு, பதிற்றுப்பத்து என்ற சங்க நூல்கள் பெயர் பெற்று விளங்கின. பின் இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது என்ற வரிசையும் இவ்வெண் அடிப்படையில் பெயர் பெறு மரபினை ஒட்டியதே யாகும். மேலும் நாற்பது செய்யுட்களை யுடைய நான்மணி மாலையும் 30 பாடல்களைக் கொண்டு அந்தாதித் தொடையில் அமைந்த மும்மணிக்கோவை, மும்மணிமாலை நூல் களும் இம்மரபினை அடியொற்றினவேயாகும். 20 பாடல்களை கொண்டு இலங்கும் இலக்கியங்களாக, இரட்டை மணிமாலை, இணைமணிமாலை, இருபா இருபஃது முதலியன விளங்குகின்றன. இவைகளையன்றி ஒருபா ஒருபஃது நவமணிமாலை அட்டமங்கலம் என்பன முறையே பத்து, ஒன்பது, எட்டுப்பாடல்கள் அடங்கிய

அந்தாதித் தொடையில் அமைந்த இலக்கியங்களாக விளங்குகின்றன. எண் அடிப்படையில் பழந்தமிழர் மரபினைப் அடியொற்றி வழங்கும் சதகம் என்ற பெயர் வடமொழி மரபினைப் பெற்றுத் திகழ்கின்றது. மாணிக்கவாசகர் முதன்முதலில் திருவாசகத்தில், திருச்சதகம் என்ற சொல்லை எடுத்தாள்கின்றார். இதுவே சதகத் தோற்றத் துவக்ககாலமாகும். இக்காலம் மாணிக்கவாசகர் காலமாகிய 9ம் நூற்றாண்டாகும். இத்திருவாசகத்திருச்சதகம் பத்துப் பத்துப் பாடல்களாக தனிப்பகுப்புடையதாய் 100 பாடல் தொகை கொண்டு விளங்குகிறது. கவிஞன் தன் பரந்துபட்ட உலகியலறிவினைத் தான் பாடும் பாட்டுடைத் தலைவன் பேர், ஊர் முதலியவைகளோடு சார்த்திப்பாடும் நூல் இச்சதகம் ஆகும்.

## பக்தி இலக்கியம்

சங்க இலக்கியத்திற்குப் பின் பக்திஇலக்கியக்காலம் அரும்பியது. அக்காலத்தே சமயப் புலவர்கள் இறைவன் மீது அவர் குடிகொண்டிருக்கும் தலங்கள் தோறும் சென்று பாடிப் பரவசமுற்றார்கள். 'அவிஞசி' என்ற ஊரில் வாழ்ந்த 'ஆறைகிழார் என்ற சான்றோர் தான் வாழ்ந்த மண்டலத்தைச் சிறப்பித்து 'கார் மண்டல சதகம்' என்ற சதகநூலை 11 ம் நூற்றாண்டில் பாடி முடித்தார்.

## சதக அமைப்பு

இந்நூல் அந்தாதித் தொடையில் ஆசிரியர் விருத்தம் கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய பாவினங்களால் பாடப்பெறுவதாகும். இந்நூலின் பாட்டுத் தலைவராகப் பெரிதும் இறைவனையே கவிஞர் ஏற்பர். ஒரோவழி மக்களில் சிறந்த கொடைஞர்களையும் பொருந்திருவுடை மன்னர்களையும், இறைவனின் அடிப்பொடையாக விளங்கும் அடியார்களையும் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடுவார்கள். இச்சதகத்தின் சிறப்பு இதற்கு முடிவாக அமையும் முடிவு அடிகள் என்ற மகுடம் ஆகும். இந்த முடிவு அடிகள் என்ற மகுடம் (இறுதியமைப்புச் சொல்) ஒவ்வொரு சதகத்திலும் பெரிதும் ஒரே வகையான முடிவு பெற்று விளங்குகிறது, 'மயிலேறி விளையாடு குகனே புல் ...... குமரேசனே' என்பது போல இச்சதகங்கள் பிற்காலத்தே தோற்றம் எய்தினமையால் கடின சொற்கள் இன்றி எளிய சொற்கள் பெற்று இயங்குகின்றன. இதில் மிகுதியாக வட சொற்களும், வழக்குச் சொற்களுமே மிகுதியாக இடம் பெற்று விளங்குகின்றன.

## சதகப்பகுப்பு

இச்சதகங்களை மண்டல சதகங்கள், துதிச் சதகங்கள், காப்பியச்சதகங்கள், நீதிச் சதகங்கள், பிற செய்திகள் அடங்கிய சதகங்கள் எனப் பலவாறு பகுக்கலாம். மண்டல சதகங்களாக 1. கார்மண்டலசதகம் 2. சோழமண்டல சதகம் 3. நந்த மண்டல சதகம் 4. பாண்டி மண்டல சதகம் 5. கொங்கு மண்டல சதகம் 6. தொண்டை மண்டல சதகம் 7. ஈழ மண்டல சதகம் என மண்டலங்களின் பெயர்களைக் கொண்டு இச்சதகங்கள் உலவுகின்றன. அடுத்து நீதிச்சதங்களாக 1. குமரேச சதகம் 2. கோவிந்த சதகம் 3. தண்டலையார் சதகம் 4. மனுநீதிச் சதகம் 5. திருவேங்கட சதகம் 6. அண்ணாமலை சதகம் 7. சுமதி சதகம் 8. விநாயகர்சதகம் 9. கயிலாசநாதர் சதகம் 10. அறப்பளீசுர சதகம் 11. செயங்கொண்டார் சதகம் 12, வீரராகவசதகம் 13. இறசூல் சதகம் 14. பர்துருஹரி சதகம் என்பன நீதிகூறும் அடிப்படையில் முகிழ்த்த சதகங்களாகும். பின்னர் துதிச்சதகங்களாக சிவனைப்பாடும் சதகங்களாக 1. நடராச சதகம் 2. தில்லை நடராச சதகம் 3. சொக்கலிங்கக் கடவுள் தோத்திர சதகம் 4.சிவகுரு சதகம் 5. மழவைச் சிங்காரச் சதகம் 6. இராமலிங்க சதகம் 7. அருணாசல சதகம் முதலியவை உருப்பெற்றன.

உமையம்மையினைப் பாடும் சதகமாக 1. தில்லைச்சிவகாமசுந்தரி சதகம் 2. அவயாம்பிகை சதகம் 3, கோமதியம்பிகை சதகம் முதலியன தோன்றின.

பின்னர் விநாயகர் மீதும் சதகங்கள் தோற்றம் பெற்றன. இம்முறையில் தோன்றியவை 1. தில்லைக் கற்பக விநாயகர் சதகம் 2. முதல்வர் திருச்சதகம் என்பனவாகும். அடுத்து முருகவேள் மீது மெய்கண்ட வேலாயுத சதகமும்,குமரேச சதகமும் சிறந்து விளக்கம் பெற்றன.

இவ்வாறு சைவசமயச் சதகங்கள் முகிழ்த்தன போலவே, வைணவ சமய சதக இலக்கியங்களும் காலப் போக்கில் மிகுதியாகத் தோற்றம் பெற்றன. அவ்வகையில் வைணவ சமயச் சதகங்களாக 1. எம்பிரான் சதகம் 2. வடவேங்கட நாராயண சதகம் முதலியவை தோன்றின. இவ் வடவேங்கட நாராயண சதகத்தில் ஈற்றடியின் மகுடம் நாராயணா – நாராயணா என்பதாகும். நம் சைவ வைணவ சமயச் சதகங்கள் தோற்றமெடுத்தன போலவே இஸ்லாமிய சமயச் சதக இலக்கியங்களும் தோற்றம் எடுத்தன. அவ்வகையில் 'முகைதீன் சதகம்' அகத்தீசர் சதகம், (மஸ்தான் சாயபு பாடியது)

மதின மாநகர் தோத்திரச் சதகம் முதலியன தோன்றின. இறுதியாக காப்பியச் சதகங்களாக ஸ்ரீமன் நடராஜாங்கித மகாபாரதச் சதகமும், திருத்தொண்டர் சதகமும் இதிகாசப் பொருளை மையமாகவும், முறையே நீதியினையும், பக்தியினையும் பாடு பொருளாகவும் கொண்டு முகிழ்த்தன.

## சதக வரிசைகள்

குமரேச சதகம், அறப்பளீசுர சதகம், கயிலாசநாதர் சதகம், அண்ணாமலை சதகம், அலையாப்பிகை சதகம், திருவேங்கட சதகம், தண்டலையார் சதகம், அருணைசல சதகம்,எம்பிரான் சதகம்,கோவிந்த சதகம், தொண்டைமண்டல சதகம், வடவேங்கட நாராயண சதகம், அகத்தீசர் சதகம், அருணைசல சதகம், இராமலிங்க சதகம், இறசூல் சதகம், ஈழமண்டல சதகம், கார்மண்டல சதகம், கொங்குமண்டல சதகம், கோமதியம்பிகை சதகம், சிவகுரு சதகம், சுமதி சதகம், செயங்கொண்டார் சதகம், சொக்கலிங்கக் கடவுள் தோத்திர சதகம், சேரமண்டல சதகம், திருத்தொண்டர் சதகம், தில்லை நடராசர் சதகம், தில்லை சிவகாமி சுந்தரி சதகம், தில்லைக் கற்பக விநாயகர் சதகம், நடராச சதகம், நந்தமண்டல சதகம், பர்துருஹரி சதகம் பாண்டிமண்டல சதகம், மதின மாநகர் தோத்திர சதகம், மழலைச் சிங்கார சதகம், மனுநீதிச் சதகம், மழலைச் சதகம், முகயத்தீன் சதகம், முதல்வர் திருச் சதகம் முத்துக்குமரனாலிச் சதகம், மெய்கண்ட வேலாயுத சதகம், விநாயகர் சதகம், வீரராகவ சதகம், ஸ்ரீமன் நடராஜாங்கீத மகாபாரத சதகம் ஆகிய 44 சதகங்கள் இன்று நின்று உலவுகின்றன.

பெரும்பாலும் சதகங்கள் கவிஞர்களின் பட்டறிவினல் தோற்றம் எடுப்பதால் மிகுதியான நீதிக்கருத்துக்களும் அநுபவ, உணர்வுக் கருத்துக்களும், அறக்கருத்துகளும் பெற்றவைகளாய் ஒளிர்கின்றன. ஒவ்வொருவரும் வாரத்தில் எந்த நாட்களில் முழுக்காடவேண்டும் என அழகாகக் குறிக்கின்றார் அறப்பளீசுரசதகத்தில். இதோ இப்பாடலைக் கூர்ந்து நோக்குக

வருமாதிவாரம் தலைக்கெண்ணையானது வடிவுமிகு
வழகுபோகும்
வளர் திங்களுக் கதிக பொருள்சேரும் அங்கார வாரந்தகைக்
கிடர்வரும்
திருமேவு புதனுக்கு மிகு பத்திவந்திடும் செம்பொனுக்
குயரறிவு போம்
தேடிய பொருட்சேதமாம் வெள்ளி சனி எண்ணெய்
செல்வமுண்டு ஆயுளுண்டாம்
(அறப்பளீசாசதகம் 50ம் பாடல்)

என அழகாக நீதியினையும், நெறியினையும் எடுத்தோதுகின்றது. நாம் கோடியாகிய புத்தாடைகளை எந்த நாளில் உடுக்க வேண்டும் எனக் கீழ்வரும் சதகப்பாடல் கொண்டு உணரலாம்.

'கறைபடா தொளி சேரும் ஆதிவாரந்தனில் கட்டலாம் புதிய சீலை கலைமதிக்காகாது பலகாலும் மழையினிற் கடிது நனைவுற்றழி தரும் குறைபடாதிடர்வரும் வீரியம்போம் அரிய குருதிவாரந் தனக்குக் கொஞ்சநாளிற் கிழியும் வெற்றிபோம் புந்தியிற் குருவாரம் அதிலணிந்தால் மறைபடாது அழகுண்டு. மேன் மேலும் நல்லாடை வரும் இனிய சுக்கிரற்கோ வாழ்வுண்டு. திருவுண்டு பொல்லாத சனியற்கு வாழ்வு போம், மரண முண்டாய்"

சதக நூலாசிரியர்களின் வான நூற்புலமையினைக் கீழ்வரும் பாடல் கொண்டு உணரலாம்.

'அன்னை தந்தையர் புத்தி கேளாத பிள்ளையோ வஷ்டமச் சனியாகுவான்
அஞ்சாமல் எதிர்பேசி திற்கு மனையாள் வாக்கி லங்காரகச் சன்மமாம்
தன்னை மிஞ்சிக் சொன்ன வார்த்தை கேளாவடிமை சந்திராஷ்டக மென்னலாக்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ சார்ந்த சன்மச் சூரியன்
நன்னயமிலாதவஞ்சனை செய்த தமையன் மூன்று மிடத்தில் வியாழம்
நாடோறும் விரோதமிரு கொண்டோன் கொடுத்துளோன் ராகுகேதுக்கள் எனலாம்
மன்னயனை யன்று சிறைதனிலிட்டு நம்பற்கு மந்திர முரைத்த குருவே
மயிலேறி விளையாடு குகனே ......குமரேசனே
அறப்பளீசுர சகிதம் 42ம் பாடல்

தீமை பயக்கும் உறவினர்களை தீமைபயக்கும் கோள்களாக உருவகித்துப்பாடியது அநுபவ உரையாகும். சோதிட, வான நூற் புலமையினையும் விளக்கிக் காட்டுவதாகும். சிலர் உயிருடன் வாழ்ந்தாலும் செத்தவர்களே எனச் சதக ஆசிரியர் கூறுகின்றார். மாறாத வறுமையாளர்கள், மாமனார் வீட்டில் உண்டு வாழ்வோர், மனைவியை வழங்கிச் சீவனம் செய்வோர், அரசவையில் நிந்தை செய்து உய்குவோர், சிவிகை சுமந்து பிழைப்போர் நீங்கா

விசாரத்தில் அழுந்தியவர்கள், சோர்வுற்ற வார்த்தையுடைய பெரியோர் மனைவிக்கு அஞ்சி விருந்தினரை ஒழித்து விடுவோர், வீம்புடன் விவகாரம் செய்யும் வல்வழக்காடுவோர் இவர்கள் எல்லாம் உயிர் சுமந்து வாழினும் இறந்த பிணமாகவே எண்ணப் படுவர் என்கிறார் ஆசிரியர் அறப் சதகம் 32ம் பாடல்

சிலர் செத்தாலும் சாகாதவராக என்றும் நின்று அமரராய் வாழ்கின்றனர் என்று கூறுகின்றார். அனைவர்க்கும் பயன்படும் குளம், கூவல் தோண்டியோர், தேவாலயங்களும் அறங்களும் நிறுவிய பெரியோர்கள், ஒப்பற்ற மகனை ஈன்ற சான்றோர் நேர் நின்று உடற்றி வெற்றிகண்ட சுத்தவீரர். தரணியில் மாறாத அறங்கள் செய்தோர், காவியஞ் செய்த கவிஞர்கள், கற்புக்கரசியினை மனையாளாகப் பெற்ற நல்லோர் முதலியோர் இறப்பினும் இறவாப் பெருமக்கள் எனப் புகழ் ஆரம் சூட்டுகின்றார்.

(அறப்பளீசு சதகம் 31 ம் பாடல்)

மேலும் இடும்பாலழிந்தவர்கள் அதாவது மமதையாலும், அகந்தையாலும் அழிந்தோர் பட்டியலை இச்சதக ஆசிரியர் புராண இதிகாசப்பட்டியல் போட்டுக்காட்டி மக்கள் அத்தகு அகந்தையினைக் கைவிடல் வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

"சூரபத்மன், இராவணன், துடுக்கான கஞ்சன், துடியான இரணியன் இவர்கள் பெற்ற வரப்பிரசாதங்கள், என்னவாயிற்று என வினவுகின்றார். மேலும் வாலியின் திறமும், துரியோதனாதியர் பராக்கிரமும், மது கைடவர் பாரிப்பும் மாவலிச் சக்கரவர்த்தியின் தருக்கும், கீசகன் கர்வமும், திரிபுரர் எண்ணமும், தக்கன் எழிலும் இவ்வுலகில் நிலைநின்றனவா ஆசிரியர் ஆய்ந்து வினவுகின்றார். தருக்கு அகல தாயாக நின்று அறம் கூறுகின்றார்.

(அற. சதகம் 47 ம் பாடல்)

மேலும், மக்கள் தம் வாழ்வில் தள்ளத்தக்கன எவை கொள்ளத் தக்கன எவை எனக்கூறும்போது வேசையர் வாழ்வினை இழித்துக் கூறி அப்பரத்தையர் நட்பு தள்ளத்தக்கது என அதனை அழகான உருவக நிலையில் பாடிப் பரவசமூட்டி பாங்காக அறவுரை கூறு கின்றார்.

'பூவில் வேசிகள் வீடு சந்தைப் பெரும்பேட்டை, புனைமலர்ப்
படுக்கை வீடு
பொன்வாசல் கட்டில் பொது வம்பல முடுத்த துகில்
பொருவில் சூதாடு சாலை
மேவலாகிய கொங்கை கையாடு திரள் பந்து விழிமலாம்
கவர் தூண்டிலாம்
மிக்க மொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடை சர்ப்பமாம்
ஆவலாகிய அல்குலோ தண்டம் வாங்குமிடம் அதிகபடமா
மனதுகள்
லயிர்நுவர்ய் இதழ் சித்ரசாலை எச்சிற்குழி யவர்க் காசை
வைக்கலாமோ ?
அறச் சதகம் 56ம் பாடல்)

என இழித்தும் பழித்தும் விலை மாதர் வாழ்க்கையை விதந்துரைக்கின்றார்.

பின்னர், உடல் சுகமாக வாழ ஏதுவான வழிவகைகளையும் குமரேச சதக ஆசிரியர் பத்தொன்பதாம் சதகப்பாடலில் அழகாக விளக்கி அவனியோர்க்கு அறிவுரை வழங்குகின்றார். அதனையும் காண்போம்.

'மாதத் திரண்டு விசை மாதரைப் புல்குவது மறுவறு விரோ
சனந்தான்
வருஷத் திரண்டு விசை தைலம் தலைக்கிடுதல் வாரத்திரண்டு
விசையாம்
மூதறிவிஞேடு தனது வயதினுக்கிளைய வொருமொய் குழலுடன்
சைபோகம்
முற்று தயிர் காய்ச்சு பால் நீர் மோர் உருக்குநெய், முதிரா
வழுக்கை இளநீர்
சாதத்தில் எவ்வளவாறலும் புசித்தபின் குகந்தனக்கு வாங்கல்
தயையாகவுண்டபின்

உலாவலிவை மேலவர் சரீரசுகமா மென்பர் காண்' — எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் கொடையால் உயர்வோரே சிறந்தவர்கள் எனக் கூறி 'ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனெதிர் ஈயேன் என்றல் அதனினு மிழிந்தன்று. கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று. அதனெதிர் கொள்ளேன் என்றல் அதனினுமுயர்ந்தன்று என சங்க கால மரபினை ஒட்டிச்சில சால்புறு கருத்துக்களைச் சதகஆசிரியர் கூறுகின்றார். அதனை ஊன்றி நோக்குவோம்.

'தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன் சாமர்த்தியமுள
புருடனுஞ்
சந்ததம் பதின்மரைக் காப்பாற்றுவோன் மிக்க தரணி புகழ்
தருதேவனும்
பொன் மட்டிலாமலீந் தொறு நூறுபேரைப் புரப்பவன்
பொருவிலிந்திரன்
புவிமிதில் ஆயிரம் போர்தமைக் காப்பாற்று புண்ணியனானே
பிரமனும்
நன்மைதரு பதினாயிரம் பேர்த்தமைக்காத்து ரட்சிப்பவன்
செங்கண்மால்
நாளுமிவன் மேலதிகவெகுக நரவோர்க்குதவு மானே
மகாதேவனும்"

தானுமிரவாது பிறரை வாழ்விப்பவன் அமரர் வரிசையில் வைத்துத் தரமாக மதிக்கப்படுவர் என மதிநுட்பம் சான்ற கருத்தினை நல்கியுள்ளார்.

இவ்வாறு அறக்கருத்துக்களை அள்ளி வீசும் சதகங்களுள் தலையாயவைகளாய் விளங்குவன. அறப்பளீசுரபுகசதகம், குமரேச

சதகம் போன்றவையாகும். இறைவன்பால் ஆழ்ந்த பக்தி மேலீட்டால் பாடப்பட்ட சதகங்களுமுண்டு. அச்சதக வரிசையில் முதலாக நிற்பது நம் நாராயண சதகமாகும்.

## 'நாராயண சதகம்'

## ஆசிரியர் இறைபற்று, காலம்

இந்நாராயண சதகம் என்னும் பக்தி இலக்கியத்தைப் பாடிய பாவலர் ஆழ்ந்த திருமால் பக்தி உடையராய் விளங்கியவர் எனப் பல ஆதாரங்கள் கொண்டு அறியலாம். இச்சதகம் இயற்றிய ஆசிரியர் பெயர் திருமலையப்பன் என விளக்கமாக கூறப்பட்டுள்ளது

எனினும் நாராயணன் மீது கொண்ட காதலால்தன்னை நாராயணப் பட்டர்' என்றே விளக்கமுற்றுள்ளார் என அறியலாம். 'நாராயணன் திருப் பெயர் கூறுத நா, அவனுக்கு பணிசெய்யாதவுடல் அவனைக் காணாத கண் அனைத்தும் பயனற்றவை என்று பேசுகின்றார். இந் நூலாசிரியர் மிக அண்மைக்காலத்தில் தோன்றியவர் என்பதனை அவர் எடுத்தாண்டுள்ள சொல்லாட்சி கொண்டு துணியலாம். தன்னைத்திருமாலுக்கு அடிமையாக்கி அவரது அடிப்பொடியாகி அவரது ஆழ்ந்த அன்பில் தன்னை ஆழ்ங்கால் படுத்திப் பாடிய பாடல்கள் ஆதலின் இப்பாடல்கள் படித்துப் பயன்பெறத் தக்கவை யேயாகும். அவரடைந்த உணர்வினை நாமும் அடையஏதுவாகிறது. இந் நாராயண சதகப்பிரதி ஏட்டுச் சுவடிகளில் சிலபகுதி சிதல முற்று பல சொற்கள் விளக்கமுறுது போயினும் அக்கவிஞர் உளத்திணைப் பின்பற்றிக் கவியும், கவிக்கு உரையும் ஆக்கி அளித்துள்ளோம்.

# பதிப்புரை

இந்நற்பணியில் என்னை உய்த்த அன்றைய தஞ்சை மாவட்ட ஆட்சியாளா திருமதி O. P. சோசம்மா I. A. S. அவர்கட்கும் முன்னுரை தந்துதவிய இன்றைய மாவட்ட ஆட்சியாளர் திரு T. R இராமசாமி I. A. S அவர்கட்கும் சரஸ்வதி மகால் நிர்வாக அதிகாரி (பொறுப்பு) திரு.அ. பஞ்சநாதம் M. A, B.Lib.Sc., அவர்கட்கும் என்னை இப்பணியை ஏற்க அனுமதித்த பூண்டி அ. வீரைய்யா வாண்டையார் திரு.புட்பம் கல்லூரி கல்விக் காவலர், செந்நெறியாளர் ஆட்சிக்குழுச் செயலர் தாளாளரும் ஆகிய உயர் திரு. கி. துளசி அய்யா வாண்டையார் அவர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றி உரியதாகுக. எல்லாவற்றிற்கும் மேலாக என்னை இப்பணியில் உயர்த்த உயர்வற உயர் நலமுடைய உத்தமனின் திருவடிகளைச் சென்னியில் இறஞ்சுகின்றேன்.

இச்சதக நூல் ஆய்வின் போது எனக்கு மிக்க உறுதுணை புரிந்தவர்கள் 'சதக இலக்கியம்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து மதுரை காமராசர் பல்கலைக்கழக வாயிலாக டாக்டர் பட்டம் பெற்ற திருமதி பழனியம்மாள் MA, Ph. D., (தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவர்) ஆவார். அவர்கட்கு என் இதயம் நிறைந்த நன்றி உரியதாகுக.

கி. கோதண்டபாணி
(ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்
அ. வீ. வா. நினைவு திருபுட்பம் கல்லூரி பூண்டி)

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர் களும், எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாக வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற் பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்

தஞ்சாவூர்
30—4—85

து இரா. இராமசாமி இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர் & இயக்குனர்
சரசுவதி மகால் நூலகம்

# "நாராயண சதகம்"

## ஹரி ஓம்

'நல்லவட வேங்கடத்து நாராயண சதகஞ்
சொல்ல வெனக்குத் துணையாமே — மல்லற்
பணையான திண்புயத்துப் பாண்டவர்க்கு முன்னம்
துணையான பாதந் துணை'

**பொழிப்புரை :**

பெருமை மிக்க திருவேங்கடமலையில் உறையும் திருநாரணனது பெயரில் பாடப்படும் இச்சதகம் என்ற நூறு பாடல் அடங்கிய இலக்கியத்தை யான் கூற விழைகின்றேன். இதற்கு எனக்குத் துணை செய்யுமாறு வேண்டும் திருத்தாள்கள், வளமும் வன்மையும் மிக்க திண்புயங்களைக் கொண்ட அறத்தின் நாயகர்களாகிய பாண்டவர்களுக்கு முன்னரே துணை செய்து காத்த அதே திருத்தாள்களே' என இந்நூலாசிரியர் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார். கணபதி காப்பு என பிறர் கூறும் காப்பினைப் போல் ஈண்டு கண்ணன் காப்புக் கூறுகின்றார். எடுத்தகாரியம் இடையூறின்றி முடிய கடவுள் வாழ்த்து இன்றியமையாதது எனக் கவிஞர் உணர்ந்து கூறுகின்றார். பாண்டவர்களை இடையூறின்றிக் காத்த திருவடிகள் பரந்தாமனின் திருவடிகள் எனக் கூறி அத்தகுதிருவடிகளே இந் நூலியற்ற ஊறின்றி உதவிக் காப்பதாக என வேண்டுகின்றார்.

## ஹரி ஓம் நன்றாக

1. நீர் கொண்டு தண்மலர் கொண்டு நன்னெறி கொண்டு
நின்குறி கொண்டு வண்
சீர் கொண்டு வந்தனை செய்துனை செறிவார்க்கே ...
பெறுவார்களோ
பேர் கொண்டிலன் பொறி கொண்டிலன் பெரியோர்களா
லருளக்கொண்டிலன்
ஆர்கண்டு கொண்டருள் சோதியே நாராயணா! நாராயணா!

**பொழிப்புரை**

தூய தீர்த்தம் கொணர்ந்தும், குளிர்மலர் ஏந்தியும் நன்னெறியோடு உன்னை எண்ணி வழிபடுவோர் உன் சீரினைப்

போற்றி எத்தி வழிபடுகின்றனர். அவ்வாறு நின் அடித்தொண்டு செய்வார்க்கு ஆகாதது யாது உளது? ஆனால் உன் பேரைக் கூறாமலும், பூவும் நீரும் இட்டு உன்னை வழிபடாமலும், பெரியோர்களது அருளினைப் பெறாமலும் உள்ள பேதையர் யாரால் அருளப் பெறுவர். நாராயணா! நாராயணா! என்று கூறினால் அனைத்து தீயவையும் நீங்கும் என என அறிந்தும் வாளா காலத்தை அவமே கழிக்கின்றனர் எனக் கவன்று அவர்கள் நாரணனையன்றிப் பின் யாரை வழிபட்டுக் கடைத்தேறுவர் எனக் கவன்று உரைக்கின்றார் ஆசிரியர்.

2. 'பர காரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணியானபின்
விரகாயிருந்து கொண்டழு தாவதென் வெறியார்
குணங்குறியார்களே
உரகா மென்னுபகாரியா யொரு சாரியாய் உலவரியாய்
நரகாரி யெம் உரகாரியே நாராயணா—நாராயணா'

பொழிப்புரை

இறைவா! நாராயணா! நின்னை வழுத்தி வாழ்வதை விடுத்துப் புறகாரியங்கள் பலவும் செய்து நின்னைப் பணியாமல் அவமே வாழ்கின்றனர் அறியாமை நிரம்பிய மக்கள். பின்னர் நோய்வாய்ப்பட்டு அல்லற்பட்டு அழுது என் பயன்? நாராயணா என்னும் நாமத்தினை பலகாலும் நவின்று பாம்பணையாய்! உபகாரியே! நரனுக்கருள் புரிந்த நாராயணா என்று அவன் நாமம் கூறி வழிபட்டு வாழ் நாளை உய்யக் கொண்மின் என்று கவிஞர் இப்பாடலில் மக்களுக்கு அன்புவேண்டுகோள் விடுக்கின்றார்.

3. சிவநீ தலம்புயன்நீ இந்திரன் நீ தலச்சந்திரன் நீயலால்
தவரீதல் விண்ணவரீதல் மாதவரீதலொடு
எவரீதலும் அவனிதலந்தனிலொன்றி நின்றனடியார
அடிப்பொடியாவென
நவநீதமும் தருமே தருமே நாராயணா—நாராயணா.

பொழிப்புரை

உலகில் உள்ள உலோபிகளையும், சிறிது கொடுக்கும் கொடையாளிகளையும் சென்று நீதான் சிவன். இவ்வுலகினைப் பாது காக்கும் காவலன் நீ, இந்திரன் நீயேதான் இவ்வுலகில் தண்மைக் கதிர் பரப்பும் சந்திரனும் நீ என்று பலவாறாகப் பாராட்டினாலும் அத்தகையோர் ஈதலும், வானவர் கொடையும், மாதவர் ஈதலும்,

இறைவனாகிய நாரணன் நல்கும் அருள் கொடைக்கு ஈடாகாது, நாரணா! நான் நின் அடிப்பொடியென்று பணிந்து வேண்டும் அடியார்க்குப் பொன்னும், பொருளும் வேண்டுமளவிற்கு நல்குவான். ஆகலின் அவனை அவனியோர் வழிபட்டு அனைத்துச் செல்வங்களையும் அடையுங்கோள்' என்று கூறுகின்றார் இப்பாடலில்.

4 'அலகந் தரும் பிணி வந்து நானலையாமலே யமரர்க்கிடுங்
கலசத்திலோர் துளி நல்கியே கவியைக் கேளாய் கருணைகரா
குலசக்கரம் திகழ் சேகரா குலசேகரன் புகழ் சேகரா
நலசக்கரா நளின சேகரா நாராயணா நாராயணா

## பொழிப்புரை

தொல்லைதரும் நோயால் பிணிக்கப்பட்டு நான் துன்புறாமல் தேவர்கட்கு அன்று தாங்கள் ஈந்த (அமிர்தத்தில்) அமுதத்தில் ஒரு துளி எனக்குத் தந்து கருணாகரனே! இக்கவிதையைக் கேட்டு மகிழ்க! சக்கரத்தினையுடைய, மன்னரும் ஆழ்வாருமாகிய குலசேகரனால் புகழப்பட்ட தாமரை மலரை விழையும் நாராயணா! நாராயணா என மனங்குளிரப் பாடுகின்றார் கவிஞர்.

5. எதிரும் பெரும்பிணி யுன் பாதந் திரையும் சிறந்தெழிலும் பிறந்து
உதிரம் பரந்து உடலும் குளிர்ந்துயிருந் தெளிந்து உனை நம்புவர்
மதியம் கிடந்தொளிருஞ் சடாமகுடந் தொறும் தொளிபம்ப வாந்திவந்தெழும்
பதபங்கையார் நாராயணா-நாராயணா.

## பொழிப்புரை

நாராயணா! உமது பாதகமலங்களைப் பற்றி நின்றோர்க்கு எதிரும் எந்த நோயும் ஒடுங்கிப் போய்விடும். நோய் நீங்குவதோடு மட்டுமின்றி எழிலும் பிறந்து பின் உதிரம் உடலில் நிரலாகப்பரந்து உடலும் அவ்வோடு தண்மையுற்று வளமுள்ள உடல்கொண்டு நின்னை வழிபடுவோர் சிறப்படைவர். உன்னை வழிபடாது மதியமும், சடையும் உடைய பிற கடவுளரை வழிபடுவோர் வாந்தியுற்று பல நோய்பெற்றுத் துன்புறுவர் என்று இடித்துரைக்கின்றார் ஆசிரியர்.

6. எல்லாரு முன்னுதாத்துமே என்றோடு மங்குறைகின்ற
பொல்லாது வேறில்லாமையா லனைவர்க்கு மாராருளர்
வல்லாருளார் வாழ்வாருளர் வறியாரளார் நெறியாருளார்
நல்லாருளார் பொல்லாருளார் நாராயணா—நாராயணா.

## பொழிப்புரை

உலகத்தில் தோன்றிய அனைத்துச் சீவராசிகளும் உன் உதிரத்திலே தோற்றம் எடுத்தன, என் உள்ளத்தில் தங்களையன்றி வேறுவஞ்சனை யறியாத நிலையில் உள்ளேன். அனைவர்க்கும் பற்றுக் கோடாக விளங்குபவர் தங்களையன்றி வேறுயாருளர்? வல்லாரோ' வாழ்வாரோ, வறியாரோ, நல்லாரோ, நன்னெறியாளரோ, பொல்லாரோ நாராயணா! தங்களையன்றி இவ்வுலகோர்க்கு வேறு யாருளர் என வியந்து போற்றுகின்றார் ஆசிரியர்.

7. 'நீ காசுதா நீ தூசுதா நீ யாடுதா நீ மாடுதா
போகாத பொதி கொடெனப் புலையற்கு நெஞ்சலையச்
சென்றேன்
ஆகாத காரியம் என்னிடத் தளவற்ற துண்டவை யாவையோ
நாகாசலா நாகாலயா நாராயணா! நாராயணா!'

## பொழிப்புரை

அற்பர்களாகிய புலையர்களிடத்தே நீ காசுதா வென்றும், பொன்னும், பொருளும் தா எனவும் சென்று இரந்து நெஞ்சு அலைலம் கொண்டேன். மேலும் என்பால் இழிந்த பண்புகள் பல உள்ளன எனினும் அவைகளை எல்லாம நாகத்தின் படுக்கையினையும் நாகமாகிய மலையிலும் தங்கியுள்ள நாராயணனாகிய தாங்கள் நீக்கியருளுக என இப்பாடலில் கவிஞர் மனமுருகி வேண்டுகின்றார்.

8. 'அயனா ரெழுத் தளவன்றியே அதியம் கணப் பொழுதாயினும்
பயனா ரிருப்பவரில்லை யிப்படி ரீதில் படி. யெண்ணியே
வியனா யுனைத் தொழுவார்கள் அவ்விதி வெல்வாரென
மிகைசொல்வதென்
அயனார் தன்புகழ்ச் சோதியே! நாராயணா! நாராயணா.

பொழிப்புரை

நமக்கு வரையறுக்கப்பட்ட ஆண்டுகள் அயனார் எழுதியபடி அமையுமேயன்றி வேறு வகையாக அமையாது. அவ்வாறு பிரமன் எழுதிவிட்டதன் பின் ஒரு கணம் கூட இவ்வுலகில் வாழ்வோர் யாருமில்லை. நாராயணனாகிய உன்னைப் பணிவோடு தொழும் அடியார்கள் அவ்வாறு பிரமனால் எழுதப்பட்ட அவ்விதியினையும், வரையறையினையும் வென்று வாழ்வார்கள் பிரமன் புகழும் பேரருட் சோதியே ! நாராயணப் பெருமானே ! இவ்வாற்றல் நினக்கே கைவந்தது எனப் புகழ்கின்றார் ஆசிரியர் இப்பாடலில்.

9. ஓமங்களால் விரதங்களால் உயர் தீர்த்த யாத்திரைத் தொடியால்
ஓமங்கள் கன்னியரிதலால் எழு பாரையுஞ் சுழல்கின்ற தா
ஆமைப் புனல் கடிகின்றதால் அடைபுன்றிய கனமென்றுதின்
நாமம் புகன்றது போலுமே நாராயணா நாராயணா.

பொழிப்புரை

பல வேள்விகள் செய்து ஓமப்புகையினை எழுப்புவதாலும் உடலை ஒறுத்து விரதங்கள் நோற்பதாலும், பலதலங்களை வழிபட்டு புண்ணிய நீராடி வருவதாலும் பின்னர் பல்வகை நன்மைகளையும் சிலர் வாயிலாக எய்துவதாலும் இவ்வுலகங்கள் அனைத்தையும் சுற்றி வருவதாலும், ஐம்பொறிகளால் எய்துகின்ற இன்பங்களை நீத்தலாலும் மக்கள் அடையும் பயன் உன் நாமமாகிய நாராயணா ! நாராயணா என்று கூறுவதால் பெறும் பயனுக்கு ஈடாகுமோ என்கிறார் ஆசிரியர்.

10. அறவைக் கெலா மடிமூலனை அருளர்க் கெலாம் அடிமூலம் நீ
பிறர்க்கு நீ பெறுவித்தும் பெற வைத்தும் பிணை தீட்டிலே
உறவைக்கிலென் உயர் காவலுக் கொள்வாது வாதுரை
செய்வேனன்
நறவைத் துழாயணி மார்பனை ! நாராயணா ! நாராயணா

பொழிப்புரை

அறப்பண்புகட்கெல்லாம் ஆதிமூலமாகவும் அருளாளர்களுக் கெல்லாம் முழுமுதலாகவும் விளங்கும் நீ பிறருக்காக அருளவித்தும் அருளியும் ஆசி நல்குகின்றாய். நறுமணமிக்க நறுந்தேன் அளாவிய திருத்துழாய் மாலையை அணிந்த மார்பினையுடைய நாராயணா ! என்னை நன்னிலையில் உறவைத்தாலும், நான் இடையறுது ஒவ்வாத வாதமே செய்து வாழ்வேன் இவ்வாறு அவமே வாழுகின்றேன் என நாணி இறைவனிடம் விண்ணப்பம் செய்கிறார் இப்பாடலில்

11. 'பாடினலோ கவி சிந்துனைப் பணிவெனலோ பலகால் எழுந்து
ஆடினலோ பலிபீட முன் நணுகினலோ சடகோபமே
சூடினலோ வலமாகவே சுழலெனலோ கதியென்று நான்
நாடினலோ கொடிதெனலோ நாராயணா—நாராயணா

### பொழிப்புரை

உன்னைப் புகழ்ந்து பாடினாலோ அல்லது உன் மீது கவி புனைந்து உன் புகழைப் பாடிப்பணிந்தாலோ, பல முறை நின் சீர் ஏத்தி ஆடினாலோ அன்றி பலிபீடத்தின் முன் நணுகினாலோ பின்னர் நின் அருட்பிரசாதமாகச் சடகோபத்தினை என் சென்னி சூடினாலோ, நின் திருக்கோயிலை வலமாக வந்தாலோ, நீயே எனக்குக் கதியென்று நான் நின்னை நாடினாலோ 'கொடிது' என்று யாரும் கூறுவரோ இவ்வுலகத்தார் என்று நாராயணனை நயமுடன் வேண்டுகின்றார் இவ்வடியார்,

12. 'பசியாத மந்திரமோ வரும் பழியாத மந்திர மந்தகனை
பிசியாத மந்திரமோ நோவிலே விழியாத மந்திரமோ
நெஞ்சிலே
முசியாத மந்திரமோ ஓதுவார் முதலான மென்றலோ
நசியாத மந்திரமோ நமோ நாராயணா! நாராயணா!

### பொழிப்புரை

நாராயணா நாராயணா என அடியார்கள் கூறும் இம்மந்திரம் பசியாத மந்திரமா? அல்லது பழியாக்காத மந்திரமா? மேலும் அந்தகனாகிய இயமனை நெருங்கவிடாத மந்திரமா? நோயினால் துன்புறும்போது உன்னை அழையாத மந்திரமா? எண்ணுவார் மனதிலே தங்காத மந்திரமா? ஓதுவாருக்கு அழியாததும், தலையானதுமாகிய மந்திரமோ என இம்மந்திரத்தின் சிறப்பினைப் பலவாறு கூறி வியந்து பாராட்டுகின்றார் இந்நூலாசிரியர்.

13. அபராதமாகிய பலசாகக் கடலாக வோடையிலேற்றியோ
விபரீதநோயலைக்குள்ளே விட நின்று தாழ்வினையேன்
செய்வேன்
இபராசனைக் கரையேத்தி நினையேத்தவிங் கரிதல்லவோ
நபராசனே! சுபராசனே! நாராயணா நாராயணா.

**பொழிப்புரை**

நான் இழைத்த தீவினைகள் எல்லாம் இப்பிறவிக்கடலாகிய ஓடத்தில் ஏற்றிப் பலவிதமான நோய்களாகிய அலைகளுக்குள்ளே ஆழ்ந்து வருந்துவேனாகிய நான் என்செய்வேன்? உலகில் உள்ள துன்புற்ற மன்னர்களையும், மக்களையும் காக்கின்ற உனக்கு என் துன்பத்தினைப் போக்குதல் அரிதானசெயல் அல்லவே. இவ்வுலகின் ஜீவராசிகட்கு எல்லாம் அரசனாயமர்ந்து வழிபடுவோர்க்கு நலமளிக்கும் சுபராசனாகிய நாராயணா ! நின்னை வேண்டி வணங்குகின்றேன் என ஆசிரியர் மனமுருகி வேண்டி நிற்கின்றார்.

14. 'வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறை சேடன்வாய்
தான்சொல்லுமே முனிவோர் பெருஞ்சபை சொல்லுமே சகிசொல்லுமே
தேன்சொல்லி பங்கிறை சொல்லுமே திசைசொல்லுமே திகையாமலே
நான் சொல்லுமே துவாரகனையே நாராயணா-நாராயணா'

**பொழிப்புரை**

நாராயணா ! நின்புகழினை அழுக்காறு இன்றி வானமும், மண்ணும் வரையாது கூறிநிற்கும். மேலும் வேதமும் ஆயிரம் தலையுடைய ஆதிசேடனது நாவும் கூறும். நிறைமொழி மாந்தராகிய முனிவோர் அவை நின்புகழ் கூறி வழுத்தும் இந்திரன் தேவியாகிய சசி நின்புகழ் கூறுவாள். தேன்போன்ற இனிய சொல்லினையுடையவளும் நின் மார்பினை இடமாகக்கொண்டு உறைபவளுமாகிய திருமகள் ஏத்துவாள். எட்டுதிசையும் நின் புகழ் கூறும். நானும் சிறிதும் திகைப்புக் கொள்ளாமல் நாராயணா ! நின்புகழ்கூறி ஏத்தி வழிபடுவேன் என்கிறார் ஆசிரியர்.

15 சுருக்கா மருந்து உடற் கூற்றிற்குக் கழற்றா மருந்து அழற்றீயிலே
உருக்கா மருந்து உலத்துண்டையாய் உருட்டா மருந்து உழக்கெண்ணெயில்
கருக்கா மருந்து அழற்கையிலே கலக்கா மருந்து உலைக்கல்லிலே
நருக்கா மருந்து இருக்கின்றதே நாராயணா, நாராயணா

பொழிப்புரை

நாரணனாகிய மருந்து இவ்வுலகில் மருந்தினைப் போலில்லை. இவ்வுலகியல் மருந்து உடற்கூற்றினுக் கேற்ற மருந்தாய் விளங்கும் ஆனால் இந் நாரண மருந்து உடல்-உள்ளம் இரண்டற்கும் ஏற்ற ஆன்ம மருந்து. இம் மருந்து உலக மருத்துகளைப் போல் சுருக்கா மருந்தாயும் தீயிலே உருக்காத மருந்தாயும் உருண்டையாய் உருட்டிப்பாகம் செய்த மாத்திரை வடிவமாய் விளங்காத மருந்தா யும் ஓர் உழக்கு எண்ணெயில் கருக்காத மருந்தாயும் கையிலே கலக் காத மருந்தாயும் கல்லிலே நறுக்கா மருந்தாயும் விளங்குகிறது எனப் பாராட்டுகின்றார்.

16. தகவாயுனைப் புகழாமலே கபியாதெடுத் திகழ் பேசுவான்
முகவாயிலே புழு வீழுமே முளையந்தகன் கிளை மோதுமே
நகவாகனு முகநெறா நாகா கனக
நக பாரண மந்த வாளியே அணைசியமேநாராயணா, நாராயணா

பொழிப்புரை

உமது புகழினை எடுத்துப் பெருமையோடு பேசாது வாளா யிருந்துவிட்டுப் பின் கூசாது உம்மை இகழ்ந்து பேசுபவர்களும் இவ்வுலகில் உள்ளனர், அவ்வாறு இகழ்ந்து பேசுவோர் வாயில் புழுத்தோன்றி இழித்துப் பேசும் நாவினை அழுகிப்போகச் செய்யும் அந்தகனாகிய இயமனது சுற்றத்தார் விரைந்து வந்து தண்டிக்க முந்துவர் அரவாபரண முடையரய்! பொன்னும் பொருளும் பெற்ற பீதாம்பரதாரா! நரசிம்மமாய் விளங்கும் நாராயணப் பெருமானே! என ஆசிரியர் இகழ்வார் இழிவும், புகழ்வார் ஏற்றமும் இப்பாடலில் விதந்துரைக்கின்றார்.

17. ''தல மேழையும் படி மோதினும் சல மெவ் விடத்திலே
கண்டநர்
பலமேதும் என் மனை செரினும் பசை பொதிடா திசைமாதரார்
குலமேது மின் பழுதீயினும் குறுகாது மால் பெறு காயமே
நல மேவுமோ யுல கெங்குமே நாராயணா - நாராயணா.''

பொழிப்புரை :

ஏழுலகினையும் வென்று அதனோடு அமையாது நீர் நிலைபெற்ற கடலையும் வென்று மிக்க பலத்தினைப் பெற்றவர்களாயினும் அவர்கள் உறவினை யான் விரும்ப மாட்டேன். திசை மாதர்கள் குலம் ஈயும் இன்ப அமுதினையும் யான் ஏற்க மனமிசையேன். திருமால் அளித்த காயத்தால் தான் நலம் பெறுவேனேயன்றி வேறென்றால் இல்லை என நாராயணனின் சிறப்பினையும் அவனளித்த உடற் சிறப்பினையும் இப்பாடலில் உருக்கமாக விளக்குகின்றார் ஆசிரியர்.

18. பண்டிட்ட தாமரையுந்தியில் படியாரெனக் கடியாரெனக்
தொண்டிட்டு நீடுதாழல் கொளுவையோ துயரத்திலே
பட வைப்பையோ
கொண்டிட்ட நீபுகழ் நிற்கவே குறையாளரைப் புகழ்கின்ற
வாய்
நண்டிட்ட பாழ் வளை யொத்ததே நாராயணா நாராயணா !

பொழிப்புரை :

தாமரை போன்ற உந்தியினையுடைய திருமாலினைப் பணிந்து வழி படாதவர்களை அடியார்கள் எனச் சொல்ல இயலுமோ? அவர்களைத் தொண்டர்கள் எனக் கொண்டு துயரத்தில் ஆழலாமோ? உலகில் உள்ள அனைவரையும் அடிமையாகக் கொண்ட நின்னைப் புகழாமல் குறையாளர்களைப் புகழ்கின்ற வாய்கள் நண்டு வசிக்கும் பாழ்வளைகளாக வல்லவா விளங்குகின்றன என நாராயணனை விளித்து நயமுடன் விண்ணப்பிக்கின்றார் கவிஞர்.

19 'பகை யானவன் பிழை செய்ததோர் பதினாயிரம் பிழை
யுண்டுதான்
வகையா யுனக் குரை செய்கிலேன் வருநோயு
நின்னருளாதலால்
மிகையான பின் முறையிட்டென்ன விடுகைத்திடாய்
விளையாட்டினால்
நகையார்களோ குகையார்களோ நாராயணா நாராயணா.

பொழிப்புரை

நாராயணா! உனக்குப் பகையானவர்கள் பதினாயிரம் பிழைகளைச் செய்கின்றார்கள். அதனையெல்லாம் நினக்கு யான் வகைப்படுத்தி உரை செய்யவில்லை. எனக்கு வரும் நோயும் உன்னருளால்தான் வருகின்றதேயல்லாமல் வேறு வழியில்லை. நோய் வந்தபின்னும் அது முற்றிய பின்னும் நின்பால் முறையிட்டு என்ன பயன்?

அவ்வாறு நோய் வந்த பின் அந்நோய் நீங்க நான் நின்பால் வேண்டினால் உலகோர் என்னை நகைத்து எள்ளி நகையாட மாட்டார்களா? என வருமுன் காக்கும் வல்லவனே என நாரணனைப் புகழ்ந்துரைக்கின்றார்.

20. குப்புற்ற கன்றுடன் ஆவெலாங் குழுவாக வோர் குழலூதியே
அப்புக் கொளுந் தொனி காதிலே வழியேகு புட்களு முண்டதே
துப்புக்கு மோர் தயிர் வெண்ணெய் பால் சொரிகைக்கு மவ்விட நங்கைமார்
நட்புக்கு மாடிய கண்ணனே நாராயணா நாராயணா.

## பொழிப்புரை

நாராயணா! நீவிர் கிருஷ்ணவதாரத்தில் கண்ணனாக ஆயர்ப்பாடியில் வேய்ங்குழல் ஊதிநின்றபோது குப்புற்ற கன்றுகளும் கன்று காலிகளாகிய தாய்ப்பசுக்களும் கட்டுண்டு நின்றன இனியதொனியினைக் கேட்டு பறவைகளும் இசையில் கட்டுண்டு செயலற்றுக் கிடந்தன. அவ்வாறு ஆயர்ப்பாடியில் தோன்றிய கண்ணனாக நீ விளங்கி ஆய்ச்சியரது மோர் தயிர், வெண்ணெய் பால் முதலிய உணவுப் பொருட்கும் இதற்கு மேலாக அவர்களது நட்புக்குமாக நர்த்தனமாடிய பிரானே ! நின் திருவருட் செயலன்றோ இவைகள் என்று வியந்து புகழ்கின்றார் ஆசிரியர்.

21. 'தாயற்ற போது தாயாகுவாய் தமரற்றபோது தமராகுவாய்
சேயற்றபோது சேயாகுவாய் செயலற்றபோது செயலாகுவாய்
வாயற்றபோது வாயாகுவாய் மலைபோலுனை நம்பினேன்
ஞாயிற்றுமுன் பனியாகுமோ நாராயணா! நாராயணா.

## பொழிப்புரை

நாராயணா! தாயில்லாதபோது இறைவனாகிய நீ தாயாகி நின்று என்னைத் தாங்குகின்றாய். பின்னர் சுற்றத்தார் வந்து கை கொடுத்து உதவாதபோது நீ சுற்றமாய்ச் சுற்றியும், பற்றியும் நிற்கிறாய். சேயாகிய மக்களில்லாதபோது மகவாக நின்று உதவி செய்கின்றாய். நான் செயலற்றநிலைக்கு ஆட்படும்போது எனக்குச் செயலாக விளங்குகின்றனை. வாயற்றுப் பேசாத மூங்கைநிலை ஏற்படும்போது வாயாக விளங்கிப்பேச வைக்கிறாய் இறைவா ! உன்னை நான் மலைபோல் நம்பினேன் இடரினையும், தளர்வினையும் ஒரு பொருளாக எண்ணாது உள்ளேன். இவ்விடர்கள் எல்லாம் சூரியன் முன்னர் பனிபோல விலக்கும் பருதிமாலே ! எனப் பக்தி மேலீட்டால் பரிந்துபோற்றுகின்றார் ஆசிரியர்.

22. 'மந்தனை புதன்குரு வெள்ளி செயமதியென் றிராவினை நாடி
எந்தமர்போல் இடர்மேவினுன் சரணைச் சரணென அண்டினால்
எந்தம்பிரான் இவனென்று கொண்டேகா தேகிப் பலனீகுவை
தந்தன அச்சுதா நம்பும்பதா நாராயணா! நாராயணா.

### பொழிப்புரை

நாராயணா! எனக்குத் திங்கள், புதன், குரு, வெள்ளி, இராகு கேதுக்கள் முதலாகிய கோளும் நாளும் கொடியனவாயமைந்து இடர்விளைத்தாலும் நின் திருவடித் தாமரைகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு யான் பற்றினால் தலைவனாகிய நீ இவன் என் அன்பன் என்று எண்ணி ஏற்ற பலனை நல்கி அத்தீமையை அகற்றுவாய். நன்மைதரும் அச்சுதா! உன்னை நம்பி உன் திருவடிகளை வழிபடுகின்றேன்` என ஆசிரியர் விளக்குகின்றார்.

23 'ஆற்றாமை யொன் றமையாமை ஒன்றறியாமை
யொன்றருளாமை யொன்று
ஏற்றாமை யொன் றிசையாமை யொன்றிகவாமை
யொன்றிருதாளையும்
போற்றாமை யொன் றடியாருடன் பொலியாமை யொன்றிரு
பொய்யெலாம்
நாற்றாய் வளர்த்திடலா நமோ நாராயணா! நாராயணா.

### பொழிப்புரை :

நாராயணனே! இயலாமையும் ஏற்றவாறு அமையாமையும் எதனையும் அறியாதிருக்கும் அறியாமையும், எதனையும் அருளாமையும் பின்னர் எதனையும் ஏற்காமையும், எதற்கும் இசையாமையும், யாரோடும் மாறுபாடு கொள்ளாமையும் உன் இரு திருவடிகளையும் போற்றி வழிபடாமையும் நின் அடியார்களுடன் பழகி அவர்களுடன் நட்புக் கொள்ளாமையும் ஆகிய இயலாமைகளை எல்லாம் நீக்கி அருள் செய்யும் பெருமானே! இவ்வாறு மிகுதியான பொய்களை எல்லாம் தான் நாற்றாக வளர்த்து இந்நிலவுலகத்தே வாழலாமோ? ஆகவே பொய்யின்றி மெய்யாக வாழ அருள்வாய் எனப் புனித மெய்யப்பனாகிய சத்தியமூர்த்தி நாராயணா என வேண்டுகின்றார் ஆசிரியர்.

24. 'தன்மைக்கு நீ அடியேனிடு சலுகைக்கு நீ பொலிகைக்கு நீ
மென்மைக்கு நீ வன்மைக்கு நீ மிகுதிக்கு நீ திக்குக்கு நீ
புன்மைக்கு நீ புலமைக்கு நீ பொறுமைக்கு நீ மறுமைக்கு நீ
நன்மைக்கு நீ தின்மைக்கு நீ நாராயணா நாராயணா'

**பொழிப்புரை :**

நாராயணனே ! உயர் தன்மைக்கு எடுத்துக்காட்டு நீயே யாவாய், அடியேனுக்கு ஏற்ற உதவி வழங்கி அருள்பவன் நீயேதான். பேரழகுக்கு நின்னைத் தவிர யார் உளர் ? மென்மைக்கும் அதன் முரணா கவிளங்கும் வன்மைக்கும் நீயே இலக்கணமா யுள்ளாய். மிகுதிக்கும் நீயேயாகிறாய். எல்லாத் திக்குமாய் உள்ளாய். அறியாமைக்கும் நீ அறிவுத் திறனுக்கும் நீயே விளங்குகின்றாய். பொறுமைக்கும், மறுமைக்கும் பொலிவாக விளங்குகின்றனை. அதனோடு மின்றி நன்மை தீமைகட்கு உறைவிடமாக இந்நானில மீது நீயே நிலவுகின்றனை. நாராயணா என அனைத்தும் அவரே என அஞ்சலி செய்கின்றார்'

25. வெழப்பிச்சது உன் பெரு நேசமே வியப்பிச்ச துன் விளையாடலே
கெழப்பிச்சதுன் பல நூல்களே கிளர்ப்பிச்சது துளபத்தின் வாசமே
வெழப்பிச்சது உன்கன சத்தியே பிழைப்பிச்சது வெம்பிணியே நா
நழப்பிச்சது சயந்தா எனுமே நாராயணா ! நாராயணா.

**பொழிப்புரை**

நாராயணா ! உன் பெருங்கேண்மையினை யான் பெறும் வாய்ப்பினை நல்கினாய். உன் திருவிளையாடல்களைக் கண்டு மிகவும் வியந்து வாழ்கின்றேன். உன்னைப்பற்றிக் கூறும் நூல்களை யாவரும் படித்துப் பயன்பெறுமாறு அருளினாய், திருத்துழாய் மாலையின் மணமே என் உள்ளத்தினைக் கிளர்ச்சியடையச் செய்தது. உன் பேராற்றல் அனைவரையும் விழிப்புறச் செய்தது. நான் பிணி, நோய் முதலியன இன்றி வாழ என்னை ஆட்கொண்டு என் நா என்றும் உன்னைச்'சயந்தா' என்று போற்றி வாழ் அருள் செய்யட்டும் என வேண்டுகின்றார் ஆசிரியர்,

26. பூரிக்கும் நின்கொடி யென்னவே புளகிக்கும் நின் சின
மென்னவே
யரிக்கு நின்சபை யென்னவே இரதிக்கு நின்புகழென்னவே
யாரிக் குணம் பெருதவர்தா னடியாருளத் தானந்தமே
நாரிக்கு வில் கொடி அச்சுதா நாராயணு நாராயணு

பொழிப்புரை

கொடி போல நின்னை நினைக்கும்போது என் உள்ளம் பூரித்து மகிழும். என் உடல் மெய் சிலிர்த்துக் கண்ணீர் அரும்பி நின்சினம் போலப் புளகித்து நிற்கும். இரதிக்கு நின்புகழ் போலவும் அடியார் களுக்கு நின் அவைபோலவும் இறைவனுகிய நாராயணனே நீ எங்கட்கு விளங்குகின்ருய். பெண்ணிற்காக வில்லையொடித்த அச்சுதனுகிய நாராயணு! அடியார் உளத்தே ஆனந்த வெறி மூட்டும் பெரியோனே! நின் அடியாரையன்றி வேறுயார் இக்குண நலன்களைப் பெற்றவர்கள் என வினவுகின்ருர் ஆசிரியர்.

27. தேன்பாடு துவள மாலையும் திருவாழி சங்கமு மேவுதியே
தான்பாடிஞர் தானுடுவின் சபைமானிடற் கதிதூரமே
வான்பாடும் புயலென்றுதான் வருமென்று வாடுகை போலவே
தான் பாடிஞல் வரவேணுமே நாராயணு-நாராயணு

பொழிப்புரை

தேனை உண்ணும் வண்டுகள் பாடுகின்ற திருத்துழாய் மாலையும், அழகிய சக்கரமும், பாஞ்சன்னியமாகிய சங்கினையும் பெற்ற பெருமானே! நின்னைப்பாடும் புலவர்கட்கு நாராயணு! நீ அதிகச் சேய்மையிலின்றி மிக அண்மையில் உள்ளனை. வானைப்பாடும் வானம்பாடியாகிய பறவை மழையினை எதிர்நோக்கிப் பாடிநிற்பது போல இறைவா! நான் நின்னைப் பாடும்போது அன்போடு வந்து என்னை அருள் செய்யவேண்டும் என வேண்டுகின்ருர் ஆசிரியர்.

28. மாத்திராய் எமதூதர்தான் வருங்காலமும் பொருதனமுமே
பாத்தீ ராவி குடமென்று நோய் படையாதுதான்
பலவண்டமுங்
காத்தீயும் நீ காவாது சாரக் கவிசொன்னுள் நோயின்றி
ஆத்திகன் இரந்து நிற்குமே நாராயணு—நாராயணு

பொழிப்புரை

பெருமானே! இயம தூதர்கள் வருங்காலத்தினை மாற்ற மாட்டீர்களா? பெரும்பொருளினைப் பெற்று வாழவும் நோயின்றி வாழவும் எனக்கு அருளமாட்டீர்களா? எங்களைக் காக்க வேண்டிய

நீ காவாதுவிடில் யார் அருள் செய்வார்கள்? உம்மீது அன்பாகக் கவி சொல்லி வாழ்த்திப் பரவினேன் என் நோய் அற்றுப்போக அருள் செய்யும் நாராயணா! என உளங்குளிர வாழ்த்தி உரைக்கின்றார் இந்நூலாசிரியர்.

29. யானோவு நின்னருளுள்ள நாளவாய் நீறு மருந்தா யங்ஙனே
தானோடு மெய்யருளித் தனையொ சஞ்சீவியைத் தனியெனுமெய்
யானோரை யண்டிய பேர் கெடார் அடியாருள்ளார் அறியார்களோ
நானோதவா ஞானோதயா நாராயணா நாராயணா !

பொழிப்புரை

நாரணனே! உன் அருள் பெற்ற நாளிலிருந்து நான் நோய்வாய்ப்பட்டு எவ்வகையான சஞ்சீவியும் அருந்தா நிலையினை உருவர்க்கிறாய் உனக்கு உண்மை யாயுள்ளோரையும் மேலும் நின்னடிமையாய் உன்னை அண்டினோரையும் எவ்வகையாலும் இயற்கையாலோ,தீயூழாலோ கேடு அடைய ஒட்டாய் காண் நீ. அடியார்கள் இச்செய்தியினை நன்கு அறிவார்கள். ஞானோதயப் பெருமானாகிய நாராயணா! நான் உன் நாமத்தை இடையறாது கூறி வழிபட்டு வழுத்தி இவ்வூறுபாடுகளினின்றும் நீங்கி அமைதி யாக வாழ அருள்க என வேண்டுகின்றார் ஆசிரியர்.

30. 'ஈசன் பிரான் பிரமன் பிதா இறைவிண்டு வண்டுறை
தண்டுழாய்
வர்சன் ராசனென்று நின்வழியன் பாலாழப் பதி தன்னிலே
தீ சங்கடம் பிணிதீருமே சிறை சண்டை வஞ்சனை தீருமே
நாசங்கடந் துயிர் வாழுமே நாராயணா-நாராயணா'

பொழிப்புரை

நாராயணே! நின்னை ஈசனாகிய சிவபெருமானும், பிரமனும் பலவாறு ஏத்தியும் புகழ்ந்தும் இறைஞ்சி நிற்கின்றனர். மேலும் நின்பால் அன்பால் தன் உள்ளங்களை ஆழப்பதித்த அடியார்கள் நின்னை தந்தையே! தலைவனே! விண்டுவே! வண்டுகள் தங்கும் வளமுறு திருத்துழாய் வாசனே இராசனே எனப்பலவாறு வாழ்த்தி வழிபட்டு நிற்கின்றனர். அவ்வாறு வழிபடும் ஆழ்வார்களின தீய துன்பங்களையும் நோய்களையும் தீர்க்கும் பெருமானே! நின்னை வழிபட்டால் சண்டை சச்சரவுகளும், வஞ்சனை, சூதும், சிறையும்

* இப்பாடலில் சில சொற்கள் சிதைந்து காணப்படுகின்றன.

எதிர்வரும் நாசங்களும் கடந்து இனிதாக வாழலாமே! நாராயணா! என நயமுடன் இயம்புகின்றார் ஆசிரியர். 'நின்னை வழிபடுவோர் வல்வினை எய்தார்' எனச் சுருக்கமாக உரைக்கின்றார் இப்பாடலில்.

31. 'ஆபாதா வாயுனை வையுமே அடியாருடன் பகைபண்ணுமே
மாபாவநூல் பலகற்குமே மறைமன்னு வாதியை யெண்ணுமே
(யோ) ஓபாவி யெனிவைநின் முன்னே யுரைசெய்ததே
விரை செய்தபூ

நாபா பராபரனே அரிநாராயணா! நாராயணா.

## பொழிப்புரை

மணமுடைய அழகிய உந்திக் கமலத்தினையுடைய பிரானே! பரவிடும் பராபரனே! அரி நாராயணா! நின்னை எல்வாய் ஆ! பாவி என வசைபாடிவையும். அடியார்களுடன் சேர்ந்து பகையணி சேர்க்கும். தீய நெறியில் உளஞ்சென்று மாயாவிகளின் சேர்க்கையால் பாவநூல் பல கற்க நேரிடும். மறையினை இழித்துக்கூறும் வாதிகளின் பக்கம் சேரும். போ! பாவியே என நின்முன் உரை செய்ய நேரிடும். இவ்வாறு தீநட்பும், தீச்செயலும், தீச்சொல்லும் உடையனாயிருந்து நான் வாழ்ந்தேன். அந்நிலையிலிருந்து என்னை நீக்கி உய்வித்த உத்தமனே! சிறந்த நாபிக்கமலத்தினையுடைய நாராயணா! என இறைஞ்சி நிற்கின்றார் ஆசிரியர்.

32. 'காற்பாலி நங் கடலாதவனை ஏவிகாலமே திரையாடிடு மந்தோ
நூற்பாவை நானது மெச்ச வோதிடுஞ் சூத்திரத்துறை
காத்து நீ
மேற்பாவ புண்ணியமான தீவினை நல்வினைக்கேது வாவரோ
நாற் பாரிக் கொரு மூலமே நாராயணா நாராயணா!

## பொழிப்புரை

காலையில் கடலில் தோன்றும் ஆதவனைக் கடல் அலைகள் ஆடி அசைந்து அழிந்துவிடுமோ? முடியாது. அதனைப்போலவே நான் செய்த பாவ புண்ணியங்களாகிய தீவினை நல்வினைகட்கு என்னை இலக்காக்குவாயோ? உன் புகழினை இடையறாது ஓதிப்புகழ்ந்து வரும் எனக்கு எந்த ஊறுபாடும் செய்யாதீர். அனைத்து அண்டங்களுக்கும் ஆதிமூலமாக விளங்கும் நாராயணப் பெருமானே! என மனம் நைந்து உருகிவேண்டுகின்றார் ஆசிரியர்.

33. 'இரையா லெழுந் சுவரான நானிரு சாணுடம் பிடியாமலே
கரையாமலே தகராமலே கழலாமலே அழலாமலே
திரையாமலே வினை மூடிகண் திறவாமலே வகை யென்னதான்
நரையாம லிருந் திடுமய்யனே! நாராயணா! நாராயணா.

பொழிப்புரை

நாராயணா! நான் உண்ணும் மிகு உணவால் இச்சுவர் போன்ற என் சாணுடம்பினை நான் எய்தப் பெற்றேன். இவ்வுடல் நோயால் பீடிக்கப்படாமலும் கரைந்து இளைத்துப் போகாமலும், தகர்ந்து அழிந்து போகாமலும் காக்க வேண்டும். மேலும் இவ்வுடலுறுப்புக்கள் இவ்வுடலினின்றும் கழலாமலும், தொல்லை எய்தாமலும் திரைந்து சுருங்கித் தோல் வற்றித்துன்புறாமலும் வினையால் கண்மூடி மௌனியாய் இல்லாமலும் என்னைக் காத்து அருளுக! என்றும் இளமையோடு நரைக்காது வாழும் நல்லோனே நாராயணா! என ஐயன் திருவடிகளை ஆழமாகப் போற்றித் துதிக்கின்றார் ஆசிரியர்.

34. 'புற்கொண்டு வாழ பசு வாடெலாம் புலிவாழ் கிணற்றிடை
வீழுமோ
கற்கொண்டு வார்தடி கொண்டு வரகடியே பரப்பாடி
பரவினுரை
நெற் கொண்டு நோக்குவார்க்கு இனி நீயிலா ரிலை
வொட்டியும்
நற்கின்ற வாயருள் கின்றதே! நாராயணா நாராயணா'

பொழிப்புரை

நாராயணனே! புல்லினை உண்டுவாழும் பசுக்கள், ஆடுகள் ஆகிய அனைத்துயிர்களும் புலிவாழ்கின்ற கிணற்றினை யே சென்று வீழுமோ? நிச்சயம் வீழாது. அஞ்சி ஒதுங்கியே வாழும். கற்கொண்டும், நீண்டகழிகளாகிய தடிகளைக் கொண்டும், வரகு, நெல் முதலாகிய தானியங்களையும் பரப்பி வாழும் மக்களை நீயல்லாது வேறுயாவர் காத்து அருள் செய்வர். இத்தானியங்கள் செழித்துப் பயன் அளிக்கவும், ஆடுமாடுகள் அச்சமின்றி வாழவும் அருள் செய்பவன் நீதானன்றோ நாராயணா! என தயமுடன் வினவுகின்றார் ஆசிரியர்.

35 'அரசனையா லபயம் பெற ரயலா ரு மன்னரை யண்டினல்
விர சென்றணைத்திட ரியவான் விளைவாத சீவி யண்டினல்
வாசங்க ரார்தி பாஞ்சவா வருகென்ன மெய்வகை யென்னதான்
நரசிங்கமே உரபங்கமே நாராயணு நாராயணு !

பொழிப்புரை :

அரசனை இருப்பதால் அயலார் அவ்வரசனிடம் அபயம் பெற முடியாது காரணம் அரசன் ஒப்பநாடி அத்தக வொறுக்கும் பண்புடையவன். ஆனல் அருள் அரசனகிய உன்னை அண்டினல் அண்டிய அடியவர்களை வருகவெனக் கூறி அவர்களது தீமைகளைப் போக்கும் பெரியோனே ! பஞ்சாயுதங்களையுடைய பார்த்திபனே ! நின்னை அண்டினேரது துன்பங்களைச் சிதைத்து அழித்தலால் நீ நரசிங்கமேதான். துன்பங்களின் ஆற்றலைச் சிதைக்கும் பெருமானே ! நாராயணு ! என்று நலிந்தோர்க்கு அருளும் நாராயணன் சிறப்பினை ஆசிரியர் இப்பாடலில் விதந்து கூறுகின்ருர்.

36. 'கோட் சொல்லுவேன் வசை சொல்லுவேன் குறை
சொல்லுவேன் முறை சொல்லுவேன்
கீட் சொல்லுவேன் மிகை சொல்லுவேன் கிலி சொல்லுவேன்
வலி சொல்லுவேன்
சூட் சொல்லுவேன் அயனூழி நாட் சொல் வேண்டினுஞ்
சிறிதுண்மையோ
நாட் சொல்லுவேன் அறிகின்றிலேன் நாராயணு நாராயணு !

பொழிப்புரை :

நாராயணு ! நின்பாதகமலங்களைப் பற்றுவதன் முன்னர் என்நெறி தீநெறியாகவே விளங்கியது. பொய்வழக்கும், சழக்குமே என் மனத்தினைப் புகலிடமாய்ப் பெற்றன. அதனல் பிறரைப் பற்றிப் புறங்கூறிக் கோள் சொல்லியும், பிறரை வசை பேசியும், பிறர் குறை கூறியும் முறைகூறியும் அழைத்தும் வாழ்ந்தேன் இதனேடுமின்றிக் கீழான உரைகளைச் சொன்னேன். மிகையான உரைகளைப் பேசித்திரிந்தேன். அஞ்சியுரைத்தேன். பின் ஆணவ வலியால் மிகையும் கூறினேன். சூழ்ச்சியும் உரைத்தேன். நானும் இத்தீய பண்பிலேயே தலைநின்றவனை உண்மை அறியாது வாழ்ந்தேன். பிரம்மா முதலாகிய தேவர்கள் எல்லாம் உன்னைப் போற்றிப் புகழச் சொல்லை வேண்டி நின்றனர். அத்தகு அருளாளனகிய நீ அடியனகிய என்னைக் கரை சேர்க்க வலிய வந்து என்னை ஆட்கொண்டாய் என நாராயணன் அன்பில் ஆழங்கால் பாடுகின்ருர் ஆசிரியர்.

37. ஆளாகி நின்னிரு நாலெழுத் தறியாத நாளறிவார் களோ
கேளாத தான் செவியூரவே கிடையாத நாள் நின்னுசையாய்
மூளாத நாணிலமீது தான முதனுளிலங் கொழுதாத நாள்
நாளாகுமோ வாளாயுதா நாராயணு நாராயணு

பொழிப்புரை

நாராயணனே! நினக்கு அடிமையாகி உன் எட்டெழுத்து மந்திரமாகிய அஷ்டாட்சரத்தினை (அதாவது ஓம் நமோ நாராயணு என்னும் நாமம்) அறியாத நாள் ஒன்றும் அறியா நாளாகும். உன் புகழினைக் கேளாத நாள் செவிக்கு மகிழ்ச்சியில்லாத நாளாகக் கருதுவேன் நின்பால் அன்பு மூளாத நாள் எனக்குப் பிறவா நாளாகும். வாளாயுதத்தினைக் கரத்திலே ஏந்தித் தீயோர்களை அழிக்கும் வள்ளலே நாராயணு! என நயமுடன்உரைக்கின்ருர் ஆசிரியர்.

38. வீட்டுக்குளே துணையாவதும் மிடைபுக்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதும் குன்றுக்குள்ளே துணையாவதும்
காட்டுக்குளே துணையாவதும் கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும் நாராயணு நாராயணு.

பொழிப்புரை

நாராயணனுகிய காத்தற்கடவுளே! நீயே வீட்டிற்குள் துணையாயிருந்து மக்களைக் காக்கின்ருய். காட்டிலேயும் நாட்டிலேயும் கூட்டிலேயும் துணையாக நின்று உயிரினங்களைக் காத்து நிற்கின்ருய். கடலில் உள்ள உயிர்ப்பிராணிகட்கும் பாதுகாவலாக இருந்து காத்து நிற்கும் பரம்பொருள் நீயே யாவாய். ஆகவே மக்களினத்திற்கும், புள்ளினங்கட்கும், விளங்குகட்கும் கடல்வாழ் பிராணிகட்கும் துணை நின்று காக்கின்ருய். இவ்வுலகிலுள்ள ஜீவ ராசிகள் அனைத்திற்கும் தாயாக விளங்கித் தண்ணளியோடு காத்து நிற்கும் நீ என்னையும் காக்காது விடுவையோ என இரக்கமுடன் வினவுகின்ருர் இப்பாடலில்

39. 'வாய்க்கின்ற தென் புகையுண்ணலாம் மணக்கின்ற சந்தனை
யுண்ணலாம்
காய்க்கின்ற மாவெறியுண்ணலாம் கற்கின்ற வானகட்
டுண்ணலாம்
தோய்க்கின்ற பாலாடை யுண்ணலாம் சுவைத்த மானிடவாயா
நாய்க்கின்றவா தினையாவதே நாராயணு நாராயணு'

பொழிப்புரை

நாராயணா ! இவ்வுலகில் நினைத்தவற்றை யெல்லாம் எளிதில் அடையலாம். நினைத்தவற்றையெல்லாம் உண்ணவுஞ் செய்யலாம். தோய்ந்த பாலாடையினை உண்டு வளர்ந்த எழில் மாயனே ! நாய் போன்ற எனது துன்பத்தினை நீக்கி அருள்வாயாக. இவ்வுலகின் இன்பங்கள் அனைத்தையும் அநுபவித்தாலும் அதில் எனக்கு நிறைவில்லை. நின் அருள்தான் எனக்கு வேண்டும் என அன்பாய் இறைஞ்சுகிறார் ஆசிரியர்.

---

* இப்பாடல் அமைந்த ஏடு மிகவும் சிதலமுற்றிருந்தமையின் பல சொற்கள் சிதைந்திருந்தன. ஏற்றவாறு அமைத்து எழுதியுள்ளேன்.

40. 'தும்பிக்கை யானை யுமைவருந் துகிலொடி வாடியா தங்கையுந்
தம்பிக்கையா மடியேனுக்குந் தரணிக்க வேதியன கம்பி
தும்பிக்கையா லானுக்கு நீ களியபய முண்டினி ஐயமில்லை
நம்பிக்கை யாகிய தெய்வமே நாராயணா நாராயணா.'

பொழிப்புரை

தும்பிக்கையினை யுடைய யானை முதலையால் தடாகத்தே பற்றப்பட்டபோது 'ஆதிமூலமே' என அலறியது. அப்போது நீ விரைந்து ஓடிச் சென்று உதவி அருள் செய்தாய். அதுபோலத் தரணியில் நின்னை அண்டிய மக்களுக்குச் சரண் அளிக்கும் சால்புடையோனே! இறக்கும் முதுமைக் காலத்தில் காப்பித்துள்ளோர்க்கு நீ அபயமளித்து உய்யக் கொள்வாய். இதற்கு சிறிதும் ஐயமில்லை நம்பிக்கையின் திருவுருவாகிய நாராயணனே என நயந்து உரைக்கின்றார் ஆசிரியர்.

41. 'பாலா வதோ தேனா வதோ பாகாவதோ பழமாவதோ
மேலான சர்க்கரை யாவதோ விரையாகு நல்லமு தாவதோ
கோலாகலப் பிணி நீர் வெகுளி சங்களோ மலை மூலிகையோ
நாலாவது நின்பேர் சொலவாய் நாராயணா நாராயணா'

பொழிப்புரை

நாராயணா! நின்பேர் சொல்லும்போது எனக்குப் பாலும், தேனுமாய் இனிக்கின்றது. பின்னர் வெல்லப்பாகாகவும் கனிந்த பழமாகவும், தேனாகவும் இனித்த நறுஞ்சர்க்கரையாகவும், மணமாகவும், விரை பொலிந்த அமுதாகவும், பிணிநோய் நீக்கும் மலைமூலிகையாகவும் நின்பெயர் கூறும்போது எனக்கு இனிக்கின்றது என நாரணனைப் பலவாறு கூறி இப்பாவலர் சுவைக்கின்றார் இப்பாடலில்

42. 'ஆலங் கெடாது ஆவந் தொடாது அயினுண்டிடாது
அனலுஞ்சுடாது
ஓலக் கொளும் தனிமாவடாது தகம்படா துறுநோய் கெடாது
எலந்தகை யிருந்திடாது இழியுங்கடா திவை கண்டிலேன்
ஞாலங் கொள்பேரே சொலாய் நாராயணா நாராயணா'

**பொழிப்புரை**

நாராயணனே ! இவ்வுலகோர் அனைவரும் ஓங்கி உலகலந்த உத்தமனாகிய நின் பெயரினையே கூறி உய்கின்றனர். அவ்வாறு நின் திருநாமத்தை ஓதிவழிபடுவார்க்கு ஆலகாலவிடமும் தீமை பயக்காது. கூரிய வேல்குத்தித் தீமை விளைக்காது, நெருப்புஞ் சுடாது. உறுநோய் மிகுதியான தொல்லை தந்து நலிவுறுத்தாது. கொடிய செயல்கள் யாவும் நின்னடியார்க்கு நேராது, நின் நாமத்தினை உச்சரித்தபோது என மிக விநயமுடன் எடுத்து விண்ணப்பிக்கின்றார். ஆசிரியர் இப்பாடலில் இயற்கையாலோ, செயற்கையாலோ நின்னடியார் இடருரார் என இயம்புகின்றார்.

43. 'பூவுக்கு நல்லது சொல்லவோ பொலிசீதளப் புதுவாசமோ
தேவுக்கு நல்லது சொல்லவோ செவியோர் முன்னே
எதிர் நிற்பதோ
யாவுக்கு நல்லது சொல்லவோ யதிசாதுவா யமுதீவதோ
நாவுக்கு நல்லது சொல்லவோ நாராயணா-நாராயணா !

**பொழிப்புரை**

நாரணா! நின் பெயரொன்றே நாவிற்கினியதாய் விளங்குகின்றது. ஆகையால் நின் நாமத்தையே நான் கூறி இஞ்ஞாலத்தில் வாழ்கின்றேன் நின் நாமம் என் நாவிற்கு இனியது எதனைப் போலெனில் மலருக்கு நல்லதாகத் தண்மையும் மணமுமே விளங்குவதனைப் போலவேயாகும். எல்லோர்க்கும் இனிய செயல் மிகவும் அமைதியுடன் இன்சொல் கூறி வாழ்வதே யாகும். இவ்வாறே 'நாராயணாவென்னா நாவென்ன நாவே' என நாவின் இழி தகைமையினையும் நாரணன் பெயரை நவில்வதால் அது பெறும் பெருமையினையும் இப்பாடலில் சுட்டிக் காட்டுகின்றார் ஆசிரியர்.

44. ஆனந்தமா யழுவார் முன்னே அலர் சூடியே தொழுவார் முன்னே
மோனந்த ரின் கரைவார் முன்னே முகிலென்னவே புகழ்வார் முன்னே
தானந் தவம் புரிவார் முன்னே சரணென் றுனையடையார் முன்னே
நானொன் செய்வே னிவை யொன்றிலேன் நாராயணா நாராயணா

**பொழிப்புரை**

பெருமானே ! பேராளா ! நாராயணா ! என்று கூறி நாளும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நின்னை வழிபட்டு அழுவார் முன்னும் மணமிக்க மலர்களைத் தொடையாகத் தொடுத்து நினக்குச் சூடி வழிபடுவார் முன்னும் நின்னையே மனத்தகத்தே எண்ணிக் கரைந்துருகுவார் முன்னும், மாமுகிலே, கொண்டல் வண்ணா என்று கூறிப்புகழ்வார் முன்னும், தானமும் தவமும் புரிந்து நின் பாத கமலத்தைப் பற்றுவார் முன்னும் தன்னையே நின்திருவடிக்கண்ணே சரணடையச் செய்வார் முன்னும் நானும் நின்னை வழிபட்டு நிற்கின்றேன். செய்வதறியாது நிற்கின்ற என்னையும் காத்துக் கரையேற்றவல்லவன் நாரணனாகிய நின்னையன்றி வேறுயார் என வேண்டி நிற்கின்றார் ஆசிரியர்.

45. தெரிக்கின்ற பூக்களெனவே சிரிக்கின்ற காரியமே செய்வேன்
கரிக்கின்ற கண்படையென வெறுங் குழப்பங் கொடுங்கடு வஞ்சகன்
பரிக்கின்ற நின்னடியா ரொடும் பழகேன் இதோ பார் வந்தபின்
நரிக்கின்ற தென்னே என் செய்வேன் நாராயணா ! நாராயணா.

**பொழிப்புரை**

மலர்ந்து மணம் வீசும் பூக்களைப் போல யாரும் எள்ளி நகையாடுகின்ற காரியங்களை நான் ஒருக்காலும் செய்யேன். கரிக்கும் கண்படைபோல வெற்றுக் குழப்பங்களைச் செய்யும் கொடிய வஞ்சகர்களாகிய நின் போலி அடியார்களோடு நான் ஒருக்காலும் பழகமாட்டேன். வருமுன்னர்க் காவா திருந்துவிட்டுத் துன்பம் வந்தபின் வருந்தி என்ன பயன் ? என்றுளம் வருந்தித் தான் வழிபடும் பெருமானாகிய நாராயணனின் நல்லருளை வேண்டுகின்றார் ஆசிரியர்.

46. 'ஆதார தேவதை யொன்றுமோ அடிமையாளை தொன்றுமோ
ஓதா துணர்ந்திட நண்பு உருபதேச மொன்றுமோ
மாதா பிதா வுடலாவி நீ மனைகாணிபோல் வலிசெல்வ நீ
நாதாவும் நீ தாதாவும் நீ நாராயணா-நாராயணா'

பொழிப்புரை

நாராயணா ! நீ எனக்கு அடிப்படையான ஆதார தேவதையாக அமைந்து அருள்பாலிப்பது மட்டுமா ? அவ்வாறுள்ள நீ என்னை அடிமைகொள்ளாது இருக்கலாமா ? நான் பல மறைகளையும், தோத்திரப் பாடல்களையும் ஓதாமல் உணர்ந்திட எனக்கு உபதேசமாக உணர்த்திய பெருமானே ! எனக்கு அன்னையும் அத்தனுமாய் நீ விளங்குவதோடு உயிரும் உடலுமாக நீ விளங்குகின்றாய். எனக்குக் காணி நிலமாயும், மனையாயும் வலிமையுறு செல்வமாயும் நீ விளங்குகின்றனை. எனக்குத் தலைவனாகவும், வேண்டுவன எல்லாம் அருளும் கொடை வள்ளலாகிய தாதாவாகவும் நீ விளங்குகின்றாய் என நாராயணனின் நலமுறு நற்பண்புகளை விளக்குகின்றார் ஆசிரியர்.

47. 'துளசீதளத் துளசி மலைத் துளத்திரெனக் குடிநீர் தாம முளதாயிரம் ...
... நூறொரு கோடி மந்திர மேலதாம் .. வலிமார்பிலர் மணி பொன்னவே
மணியாம் எனைப்பிணி என்செயும் ... ...
நளகூபான பணிவென்றவா நாராயணா நாராயணா'

இப்பாடல் அடிகள், பழுதுபட்ட சுவடியாயினமையால், தெளிவாகத் தெளிய இயலாது போயிற்று. சில குறைவான அடிகளும் சொல்லுமாயுள்ள இப்பாடலை அப்படியே பதிப்பித்துள்ளோம்.

பொழிப்புரை

குளிர்ந்த செடியாகிய துளசி மாலையை உடைய நீர் என் உள்ளத்தே அமர்ந்துள்ளீர் என்குடி முதலாக நீங்கள் விளங்குகின்றீர்கள். உமக்குக் கழுத்தில் அணியும் மாலைகளோ ஓராயிரம் உண்டு. உமக்கு அர்ச்சிக்கும் மந்திரங்களோ பல கோடி மந்திரங்களாகும். சிறந்த மணிகட்கெல்லாம் மேம்பட்ட மணியாய் விளங்குபவனே ! உன்னை அண்டியமையால் என்னைப் பிணி என்ன செய்யும்? உண்ணும் சோறாகவும், பருகும் நீராகவும் உணர்வினில் ஒன்றிய நாராயணனே என நவில்கின்றார் ஆசிரியர்.

48. 'வடுதித்தையோனா இடுவந்தியோனா மருளஞ்சினேன் அருளஞ்சினேன்
நடுசிந்தையோன் நிலை நம்பினேன் உனை நம்பினேன் விடுதும்பிலேன்
முடுகம்பிலேன் வினைமண்டினேன் உனையண்டினேன்
நடுவொன்றிலேன் பிடை குன்றுமோ நாராயணா நாராயணா'

பொழிப்புரை

நாராயணனே! இவ்வுலகியலில் தீமையே செய்து வடுப்பெற்ற நிந்தனையுடைய நான் உன்னை நெருங்கி நின்னருள்பெறமிகவும் அஞ்சுகின்றேன். நடுநிலையுடைய சிந்தனையாளனாக உன்னை நம்பி நிலையாக நான் வாழ்கின்றேன். வினைகள் மண்டிய நான் அவ்வினைகளை அகற்ற, தங்கள் திருவடிகளைச் சரணாக அண்டியுள்ளேன். உன்திருவடிகளைச் சேர்ந்த நான் சிறிதும் அவலமுறுவேனோ என அங்கலாய்க்கின்றார் ஆசிரியர்.

49. குடிநீர் கொண்டீர் முக வேதிமா குட வெண்ணெயை
வடியீர்! பிரம்படியீர்! வெண்ணெய் றெறியீர்! விழிக்கெதிரோர் வஞ்சனை செய்திடீர்
*நடியீர் வயித்தி யாரலவார் கமதாடு குக்கிட மிட்டுளே
நடியீரெனும் பிணியஞ்சவே நாராயணா நாராயணா'
குறிப்பு *மூன்றாம் அடி சுவடியில் தெளிவாய் அமைந்திலது

பொழிப்புரை

நாராயணனே! நீர் ஆயர்ப்பாடியில் ஆயர்களால் கண்ணனாக வளர்க்கப்பட்டபோது குடத்தில் உள்ள வெண்ணெயைத் திருடி உண்டீர்கள். அதனால் ஆய்ச்சியர் மத்தினால் அடியுண்டீர். விழிக்கு எதிரே நேருக்கு நேராக நீர் எந்த வஞ்சனைச் செயலையும் செய்திடீர் நீர் குடமுழா ஆடினீர். பலவாறு நடித்துப் பல்லுயிர்களையும் உய்யக் கொண்டீர். அத்தகு பெருமானாகிய தாங்கள் என்னையும் ஆண்டு என் பிணி போக்கி அருள வேண்டும் என அன்புருக வேண்டுகின்றார் ஆசிரியர்

50. 'பிரம்புக் கன்றிடு சாமரை பிணி பொருந்து நீ பிரிரா யுத்தவே
துரம்புக்குளே யறியாத தெனுலகத் தெவா முறை சோதி தொல்
வரம்புக்குளே எலும்புக்குளே வழும்புக்குளே தழும்புக்குளே
நரம்புக்குளே புகவெழுக்கியே நாராயணு நாராயணு

**பொழிப்புரை**

நாராயணு! நீ அறியாதது யாது உளது? எல்லாம் அறிந்தும் அறியாதவன் போல் இவ்வுலகிலே அறிதுயில் கொள்ளும் நாரணனே! சேர்திவடிவாகிய பெருமானே! தோலுக்குள்ளும், எலும்பிற்குள்ளும், வழும்பிற்குள்ளும், தழும்பிற்குள்ளும் நரம்பிற்குள்ளும் இவ்வாறு எண்பெழுந்தியன்ற யாக்கையினை எனக்கு அளித்து அதில் ஆழ்ந்து அதனைச் செப்பனிடவே காலத்தைச் செலவிடப்பணித்துவிட்டாய். நின்னைச்சிறிது நேரமாவது சிந்திக்க விடாது இவ்வாறு அவமே என்னை அகலவிடலாமோ? என ஆழ்ந்து வினவுகின்றார் ஆசிரியர்.

51, 'மன்றுடியே யதிசோபன மைழவண்ணனே விசயனுக்காக
ஒன்றார்செயஞ் செயுமச்சுதா மிக வாழி கேசவனே பசுங்
கன்றால் விளாவெறி வாயா! பசுங்கலியாளா மங்கலமாதவர்
நன்றாக வேங்கட மாயவா நாராயணு நாராயணு'

**பொழிப்புரை**

ஆய்ப்பாடிப் பொது விடங்களில் ஆயர் மகிழ ஆடிய பெருமானே! மங்கலமான மைவண்ணப் பெருமானே! பார்த்தனுக்காகப் பகைவென்று புகழ் சூடிய அச்சுதா! கேசவா! ஆவின்கன்றால் விளம்பழமாக உருமாறிய அரக்கனைக்கொன்ற பெருமானே! மாதவர்களை உய்யக் கொள்ளும் மாதவா! வேங்கடமலையில் இனிதுறையும் பூங்குழல் வண்ணு! நாராயணு, நாராயணு என நாவினிக்கப் பாடுகின்றார் ஆசிரியர்.

52. 'இந்தாவெனுதென திச்சைநீ யெளி நீவையோ யிழிவாகுமோ
தந்தான மாலிகையா லருச்சனை செய்குவார்தாம்
விரவார்களோ
வந்தான பேர் துதியார்களோ வசுதேவர்சொல்
குறையாகுமோ
நந்தாதை பொன்னனை செய்வனே நாராயணு நாராயணு'

**பொழிப்புரை**

பெருமானே! நாராயணு ! எனக்கு இச்சையாயும் எளிமையாகவும் காட்சி நல்குகின்றாய் சிறந்த பவித்திரப் பொருள்களால் நின்னை

அர்ச்சனை செய்பவர்கள் எல்லாம் ஒருங்கேகூடி நின்னைத் துதித்துப் போற்றி நிற்கின்றனர். வசுதேவர் என்றவரை! தந்தையினைப் போலவே தகைமையினையுடைய நாராயணா! என் செயல்கண்டு புன்னகை புரிவோனே! என நாக்குழைய நலமுறப்பாடுகின்றார் ஆசிரியர்.

53. சித்தப்பனோ துருவற்கு நீ தெளிநீ பாண்டவர் பெரியப்பன்
ஒத்தத்தை தேவகி தங்கையோ கண்டா காண மிதுலேசனோ
சத்தத்தரோ பெறுவாரெலாந் தொடுவேலொன வழக்கிட்டு
வெளவிடோ
நத்தப்பமே போருள தந்துபோ நாராயணா நாராயணா!

பொழிப்புரை

நாராயணா! துருவனுக்குச் சிற்றப்பனையும் பஞ்சபாண்டவர் கட்குப் பெரியப்பனாகவும் ஒத்து இருந்து உயர்பணி ஆற்றினையோ? தேவகையினைத்தங்கையாகக் கொண்ட கஞ்சனை வேரறுத்த வீரனே? உன் அன்பு உறவினை நான் மறந்து வாழ இயலுமோ? மேலும் சூதுபோரில் வென்ற நாட்டினைத் தரமறுத்து வாது போரில் வெல்லவழிவகுத்த பெருமானே! நாராயணா என்று இப்பாடலில் கூறுகிறார்.

54. தன்னெட்டெழுத் தயன் அந்தகன் தலைமேலே பொறித்தடி நாவில்
என்னெட் டெழுத் தெழு தாமையா லுலகத்து ளோரவனைத்
தொழார்
கன்னெட்டிடக் கருனெட்டிடக் கழல் நெட்டிடகன்னகாலி
பின்னே நெட்டிட்ட
நன்னெட் டெலார் துடாபாதனே நாராயணா! நாரார்யணா!

பொழிப்புரை

பிரமனும், அந்தகனாகிய இமயனும் தன்னெட்டெழுத்தினை என் தலையிலே பொறித்துவிட்டனர். ஆனால் என் அடி நாவிலே 'ஓம் நமோ நாராயணா' என்னும் அஷ்டாட்சர மந்திரத்தை எழுதாது விடுத்தனர். அதனால் நாராயணா என்னு எனது நா பயனில்லா நாவாக ஆகிவிட்டது என்று தன் இழிநிலையினை எடுத்துரைக்கின்றார். காட்டிலும், நாட்டிலும், மேட்டிலும், வீட்டிலும் கன்றுகால் களின் பின்னும் நடமாடிய கழற்காலினையுடைய கண்ணபிரானே! என நாராயணன் சிறப்பினை எடுத்துக் கூறித்தன் நிலை கூறுகின்றார் இப்பாடலில் ஆசிரியர்.

55. உரலுக்குமோர் உறுபஞ்சமோ உனை நச்சினேன் எனையச்சமென
விரலிட்டதோ வெனவல்லனோ விதிகைக்கு மவ்விரலுக்
கூளோரா
புரலுத்த நோய் கழலப் பயனுய புதிதாய் மருந்தொரு தூதனால்
நரலைக்கு ளாலவா வெனுமே நாராயணா நாராயணா.

பொழிப்புரை

நாராயணா ! ஆய்ப்பாடியில் கண்ணனாகப் பெயர் கொண்டு ஆயர்களோடு ஆடல் புரிந்தபோது வளர்ப்புத்தாய் யசோதையம்மையால் உரலில் கட்டப்பட்டார்கள். அவ்வாறு உரலோடு பிணிக்கப்பட்ட பிரானாகிய உன்னை நான் மிகவும் நச்சி வழிபடுகின்றேன். என் விரலிலோ, உடலிலோ ஏதேனும் நோய் வந்தால் அதனை நீக்கி அருளும் பெருமான் நீயேயன்றி வேறுயார் என வினவுகின்றார் ஆசிரியர்

56. சமையாத தேவதை யாது பொய் சமையாதுமை
பேச் சென்பதும்
உமையாளுடன் பரமன் பரிந்துமை யாளு மாகமமென்பது
நமையாள் வதும் அந்தமையாத தென்னிமைப் பொழுதிலே
தமையாதிபன் புகழ்கின்றதும் நமையாமலே
நாராயணா—நாராயணா

பொழிப்புரை

நாரணனே ! நீ தெய்வங்கட்கெல்லாம் தலையாய தெய்வமாய் விளங்குகின்றனே. உமையாளும் பரமனும் அளித்த ஆகமங்களின் உட்பொருளாய் விளங்குபவனே ! அத்தகு பெருமானாகிய நீ என்னை ஆட்கொண்டருளும்போது திலோத்தமை போன்ற அரம்பையரின் மையல் என்னை என்ன செய்து விடும் என எள்ளி இகழ்ந்து கடிந்துரைக்கின்றார் ஆசிரியர் இப்பாடலில்

57. 'நீ யண்டரால் அடிப்பட்டநாள் நினைவில்லை நின்னுதரத்துளே
போயண்ட கோடியில் எந்தவோர் புரையுக்குள்ளே
விளையாடினேன்
மாயங் கிடந்தற்வேன் ஒவ்வாதன கிடா மாதலரம்
நாயகிமார் விடுமன்பனே நாராயணா. நாராயணா'

பொழிப்புரை :

நாராயணா ! நீ ஆய்ப்பாடியில் கண்ணனாகத் தோன்றி அரிய ஆடல்கள் புரிந்த அமயத்தே அங்குள்ள தீதொன்றுமில்லாத ஆயர்களால் அடிபட்ட நாள் எனக்கு நினைவில்லை. அன்றே

யசோதையால் அண்டகோடிகளையும் அடக்கிய உன் உதரம் என்பது நீ மண்ணுண்டபோது அறியப்பட்டது. அவ்வண்டகோடியில் ஒரு தூசியாகவுள்ள நான் நின் மாயத்தன்மைகளை நன்கு அறிவேன். அண்டினோரை அகலாது ஆதரிக்கும் அன்பனே ! என நாராயணன் அடியாரிடத்தே மேற்கொண்ட எளிய அன்பினை இப்பாடலில் விளக்குகின்றார் ஆசிரியர்.

58. 'காசிக் குளநுங் கயையுக்குளும் கழியாத பாதனைகையால்
சூசிக் குலந்தனை வந்தியென குறையாகுமோ
யிணையென்பதோர்
வாசிக்கு வந்தருளிச் செய்தாய் ! வயிரத் திராவணி
யத்தைதன்
நாசிக்கு வாளெறி நாராயணா ! நாராயணா !'

பொழிப்புரை :

நாராயணனே ! வைரத்திண்தோள் இரணியன் போன்ற அரக்கர்களை யெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் அழித்தொழித்த பெருமானே ! காசி என்ற புண்ணியத் தலம் சென்று துறையாடி வந்ததும், மேலும் கயா வென்னும் தலத்திற்குச் சென்று நீராடி வந்ததும் ஆகிய சிறிதும் அயராத திருவடிகளையுடைய அடிப் பொடியாகிய என்னை எளிதில் மனமுவந்து அடிமையாக ஏற்று அருளினீர்கள், என்று இறைவனின் அருட்பண்பினை விளக்குகின்றார் ஆசிரியர்.

59 'தானைக்கு வாவெனு நாவினுந் தருகைக்கு வாசனையான
நொய்
யானைக்குடா தின்றைக்கு வா அரசவாமலே அன்றைக்கு வா
தோளைக்கு வாலுற வெய்தலன்று யாம்கண்டிராவரை
வின்றுபோய்
நாளைக்கு வாமெனு மையனே நாராயணா நாராயணா'.

பொழிப்புரை :

முதல் நாள் போரிலேயே தன்தானைகளை எல்லாம் இழந்து தரணி நோக்கித் தலை கவிழ்த்து நின்ற இராவணனை 'இன்றுபோய் போர்க்கு நாளைவா' வென நயமுடன் உரைத்த நாராயணனே ! நீயானைக்கும், பிற உயிரினங்கட்கும் ஏற்பட்ட இன்னல்களைக் களைந்த இனியோனாகலின் கடிய வந்து என் கவலையை நீக்குக என வேண்டுகின்றார் ஆசிரியர்.

60. 'விக்கற்கிடம் பொருமற்கிடம் விடு மூச்சுமே லெழுதற்கிடம்
சக்கற்கிடம் இருமற்கிடம் கரைதற்கிடம்
சொக்கற்கிடம் சுடுதற்கிடம் தரு மெய்யனே
நக்கற்கிடம் தரு நாராயணா ! நாராயணா !

பொழிப்புரை :

இறைவா நாராணா! நான் விக்குவதற்கும், பொருமுவதற்கும் மூச்சு விடுதற்கும், இருமுவதற்கும், தனியாக நின் பெயரைக் கூறிக் கரைதலுக்கும், இவ்வுலகினில் யான் ஆற்றும் பல தொழிலுக்கும் எனக்கு இடங்கொடுத்தருளும் இன்பமாயே! யான் இறந்த பின் சுடுதற் கிடம் தந்தருளினை. இவ்வாறு எல்லா வற்றிற்கும் எனக்கு இடந்தந்து என் இடர் நீக்கும் ஐயனே ! என இன்னல்களைய வேண்டுகிறார் ஆசிரியர்.

61. பத்தான நின் சொன்னங்களோ பனையோலையில்
அமைவிதன்னவே
இத்தரா வாதிகள் சங்க மாதவனை யார் பெறார்
எனையாரெடார் ?
மெத்தாடலென் விளையாடல் வினை நாலு மங்கறிகின்றிலேன்.
அத் தாரியாய் முத்தாரியாய் நாராயணா நாராயணா !

பொழிப்புரை

கூரிய சக்கரப் படையினையுடைய பெருமானே ! முத்துக்கள் நிறைந்த கடலில் அறிதுயில் கொள்ளும் மாயனே ! நாராயணா ! பல்வகையான நின் செயல்களை எல்லாம் இம்மண்ணகத்தே வாழும் மக்கள் யான் உணர்ந்த அளவிற்கு யார் உணர்ந்துள்ளார்கள். உன் பரந்த விளையாடல்களை முற்று மறியும் மூதுணர்வும் யான் வாய்க்கப் பெற்றிலேன் என நாரணன் திருவிளையாடல்களை நயமுடன் நவின்றுள்ளார் ஆசிரியர்.

62. சுவை யொளி யூறொலி மாமணந்துடார் முன்னே சுழல்
கொண்டையுங்
கவை மானு மானையும் விட்டுப் பிரியக் களிவண்டுமாயளி
தண்டியென
இவை தூய தென்றி தீயதென்றினி னிண்டிலெதூ
யென்செய்வேன்
நவைதீரவே அருள் செய்வையோ நாராயணா நாராயணா !

பொழிப்புரை

நாராயணனே ! சுவை, ஒளி ஊறு, ஓசை, மணம் ஆகிய ஐம்புலனின்பங்களை விட்டுப் பிரியா மனமின்றி இவவுலகியலியே சுழன்று வாழும் மக்கள் இனத்திற்கு இதுதூயது, இதுதீயது என்று தூண்டி அவர்கட்கு ஏற்ற அறிவு செலுத்த வேண்டும் ஐயனே ! குற்றம் நீங்க அருள் செய்து என்னை உய்யக் கொள்ளவேண்டும் என இறைவனை இனிதே வேண்டுகிறார் ஆசிரியர்.

63. 'நெட்டெணியின் படியெட்டு மோடு நின்னெட்டெழுத்
தெழுண்டமே
லெட்டெழுறும் பதமெட்டவே யிரதித்த சர்க்கரை பொய்நினை
வட்டப் பசும்பழமை யெனும் மதுரித்தமுதேனே பொலசம்
நட்டே யருள் புனல் கூட்டுவாய் நாராயணா–நாராயணா !

பொழிப்புரை :

அஷ்டாட்சரம் என்னும் ஓம் நமோ நாராயணா என்னும் மந்திரத்தை மனத்தகத்தே எண்ணி வழிபட்டால் ஏழண்டமும், மேலேழ் அண்டமும் நின்னடியார் திறத்து எளிமையுடையதாகும். கனித்த பழமாயும், பழத்தின் மதுரமான அமுதாகவும் விளங்கும் நண்ணியோருக்கு நண்பனாய் விளங்கும் நாராயணா ! எனத்தன் நல்குரவு நலிய அன்புப் பெருக்கினை அடியார் வேண்டுகின்றார் இப்பாடலில்

64. 'காணுங் கண்ணே குவியுங்கையே கருதுள்ளமே
கனலாஞ் சுவை
பூணும் புயம் புளகங்கமே புகழ் வைகல் திகழக் கொழுமியே
ஆணும் பெண்ணும் சரணென்பதே அவையில்லை நான்
வராத நீ
தாணும்பே அறக் காதாரமே நாராயணா ! நாராயணா !

பொழிப்புரை :

நாராயணா ! நின்னைக் காணாத கண்கள் பயனற்றவை. நின்னை அன்பால் குவித்து வணங்காத கைகள் இருந்து என்ன பயன் ? உன்னை ஆழச் சிந்தித்து ஆழங்கால் படாத மனம் என்ன பயனுடையது ? உன்னை நினைத்து வழிபட்டுப் புளகம் சேராத புயங்கள் இருந்து என்ன பயன் ? அவனியில் உள்ள ஆணும்,

யென்றும் நின்னைச் சரணென வாழாவிட்டால் அவர்கள் இவ்வுலகில் பிறந்து வாழ்வதில் என்ன பயன் உள்ளது! எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் விளங்கும் அரியே என அன்பு தோய்யக் கூறுகின்றார்.

65. 'கவி நல்லதோ கவி தூயதோ கண்மூடி ஞன் நனவத்திலும்
புவி நல்லதோ வினைசெய்துமோ புகழ் நல்லதோ
புகழுவெட்கிநின்
செவி நல்லதே யருள் நல்லதோ செயம் நல்லதே வியம்
நல்லதே
கவி நாவிலே வருநைவிலே நாராயணு! நாராயணு!

**பொழிப்புரை :**

நாராயணு! நின்னை நான் நினைத்த அளவிலேயே கவிதை பெருக்கெடுத்து ஓடுகிறது. அக்கவிதை நல்லதோ, தூயதோ நான் அறியேன். இப்புவி நல்லதோ புகழ் நல்லதோ, புகழுக்கு வெட்கி நிற்கும் செவிநல்லதோ, அருள் நல்லதோ செயம் நல்லதோ, ஏவல் நல்லதோ, பணி நல்லதோ எது நல்லது, நீயது என விளக்கி அருளுக விமலனே என வேண்டுகின்றார் இப்பாடலில்

66. "பசை கொண்ட பாகவ தாகமம் பருகாது காதுருகாது நெஞ்சு
அசை கொண்ட பாதக நீரிலைய மிளவானையசமக வாத்தியா
கசை கொண்டு மோதுகை தாக்குமோ களவுள்ள நானுனது
அன்பிலியென
நசை கொண்ட காரிய மாவதென் நாராயணு! நாராயணு!

**பொழிப்புரை**

பரமாத்மாவின் வரலாற்றினை விளக்கிக்கூறும் பசை கொண்ட பாகவதம் ஆகிய ஆகமத்தினைப் படிக்காத நெஞ்சும், அதனைக் கேட்காத காதும் பயனற்றவையாகக் கருதப்படும். உன் அன்பிலே கட்டுண்டு என்றும் நான் வாழ விரும்புகின்றேனேயன்றி வேறு நசை பெற்று நான் வாழ விரும்பேன் நாரணனே எனத்தன் கனிவு தோன்ற உரைக்கின்றார் ஆசிரியர்.

67 'பல கூவப்பட்டொரு நெஞ்சும் நின்பரி சென்ன வெங்கணு
மாலுமாய்
வெல கூறுகொண்டுனை விட்டதென் விரல் நீக்கி மோராது
கார்வராகன் போல்
மலகூடலில் நின்றி தானுமே மதியென்ற விட்டெனை
யொத்த தென்
நல கூறுவார் சுரதேவெனும் நாராயணா ! நாராயணா' !

பொழிப்புரை :

நாராயணா ! என் உள்ளம் பலவாறு பலவகைப்பட்ட சிந்தனையில் ஆழ்ந்து திருமாலாகிய நின் திருவடிகளைப் பற்றாது புறம்போய் விட்டது. தேவர்கட்கெல்லாம் தேவனே ! இம்மலக்கூடாகிய இவ்வுடல் பெற்று வாழும் நான் நின் திருவடி பற்றி இடையறாது வாழ நின் அருட் கருணையினை அளித்து நிற்பாய் எனவேண்டுகிறார். ஆசிரியர்

68 மைநாக மாழியை யண்டி வாழ வகை யென்ன நின்னருள்
வெள்ளமா
சையினு விறந்தன ஹுறவே சவை மானிடற் கிதூரவே
கையினு லிரந்தனை பண்ணை வரை நீ கலிதீர நின்
கையிலேற்றனும் நயனரிச்சை சரியானதோ நாராயணா !
நாராயணா.

பொழிப்புரை :

அருள் வெள்ளம் பொழியும் அரிநாரணனே ! இப்பிறவியாகிய பிறவிப் பெருங்கடலைக் கடக்க நின் திருவடியாகிய அருட்புணையைப் பற்றி உய்ய எண்ணுகின்றேன். என் கலி நீங்க நின்னையால் ஏற்றி ஓட்ட வேண்டும். இவ்விதம் என் வேண்டுகோளை ஈடேற்றி அருள் செய்ய வேண்டும் என அன்பால் இரக்கின்றார் ஆசிரியர்.

69. எமக்கின்று வா குடும்பத்துளேஇழப்புண்ணலா மது தாதையார்
தமக் கொன்றை வைத்திலரென்பதே சழக்குள்ளமோ
வழக்குள்ளமோ
சுமக்கின்ற நச்சுமையாள் நச்சு தன் மற்றையச் சுவைக்கெலாம்
நமக் கென்ன காரிய மென்பரே நாராயணா! நாராயணா.

பொழிப்புரை

பெருமானே ! இன்று பல குடும்பத்தில் ஏற்படுகின்ற வழக்கும் சழக்கும் யாதெனில் 'பெற்றோர்கள் எமக்கும் பெரும் பொருள் சேர்த்து வைக்கவில்லையே என அங்கலாய்க்கும் அவலமேயாகும். அத்தகு நிலையில்லாச் செல்வத்தை நச்சி அவலமுறுவோர் உண்மை உணராதவர்கள் ஆவார்கள் நின் திருவடியே சுவையெனக் கண்டு அநுபவிப்பவரே இவ்வுலகின் நிலையாமையினை உணர்ந்தவர் என உணர்த்துகின்றார் ஆசிரியர்.

70. வாஞ்சித்த தெதுவுமாக நீ வட வேங்கடந் தலில் நிற்க நான்
நீஞ்சித் திரிந்தனனே வீணிலே நிழல்கண்ட பின் நிழலில்லையே
காஞ்சித் தலத் தருளாளனே! கனகோபுரக் கொடியாடு பொன்
நாஞ்சித் திருப்பதி வள்ளலே நாராயணா நாராயணா.

பொழிப்புரை

பெருமானே ! நாராயணா ! வடவேங்கடமாகிய திருமலைத் திருப்பதியிலே தாங்கள் நின்ற கோலத்தில் நின்று அருள்பாலிக்கின்றீர்கள். இப்பிறவி வெள்ளத்தில் வீணே நீந்தித் திரிகின்ற என்னை ஆண்டு அருளும் பெருமான் காஞ்சித் திருத்தலத்தில் பேரருளாளனாகப் பெருங்கோபுரங் கொண்டு விளங்குகின்றார். அத்தகு வள்ளலே திருப்பதியிலும் நின்ற கோலத்தில் அருள் செய் கின்றார் என நினைவுறுத்துகின்றார் ஆசிரியர்

71. 'பசுக்கட்கு மாடினை பாடியின் பலவாறு ஆடியவா யாதவச்
சிசுக்கட்கு மாடினை மைந்தனார் திருட்டுக்கு மாடினையன்றுதான்
முசுக்கட்கு மாடினை நொய்தின் முசுப்புக்கு மாயருள் பூவை
நசித்திப்பின் வாசனை கொள்வரோ நாராயணா! நாராயணா.'

பொழிப்புரை

நாராயணனே ! நீர் ஆய்க்குலத்தில் ஆய்ப்பாடியில் அவதரித்து ஆடல் புரிந்து அங்குள்ள ஆவினங்களை ஆடிப்பாடி மேய்த்து அருள் செய்தனை. பின்னர் ஆயர்களது சிசுக்களுடன் ஆடிப்பாடி அகமிக மகிழ்ந்தனை. முசுக்கட்கும் ஏற்ப ஆடிப்பாடி

அகமகிழ்வித்தாய். பெருமானே! பூவினை மென்மையாய் பாவித்து மணம் நுகர வேண்டுமேயன்றி அதனை நசுக்கியா உலகோர் மணங் கொள்வார்.? அதுபோல் அனைவரையும் நச்சியே நீ அக மகிழ்வித்தாய் எனக்கூறுகிறார்.

72. 'குலங்காணவே குடிகாணவே குணங்காணவே பழுதாயினும்
பலங் காணும் நின்னடியா ரொடும் பவ சாகரப் பாப
மெனிறுளம்
கலங்காமலே கழலாமலே கழல் காணுமோ கழலாமணம்
நலங்காமலே நலங்காணுமோ நாராயணா! நாராயணா!

**பொழிப்புரை**

நாராயணப் பெருமானே! சார்ந்த குலமுங்குடியும் பெற்றுள்ள குணமும் பழுதுபட்டாலும் உன்னடியைச் சார்ந்தவர்கள் அவை களின் குறை நீங்கி வலங்காண்பர். ஆகலின் எதற்கும் கலங்காமலும் சிறிதும் மனம் மயங்காமலும் நின் கழலைக் காணும் அருளை எளிதில் நல்குவாய் என இறைவனை இரந்து நிற்கின்றார் ஆசிரியர்.

73. 'ஈன்றானும் நீ யல தானு மவ்வியனுந்தி யண்டிய நல்லனே
போன்றானை அன்பெறு பிள்ளையாய்ப் பொறிதூய
நான்வினவாதிரா
சான்றோர் முன்னே யினி நோயை ஈயாய் எனச் சபதங் கொடா
நான்றோனை வீசிய வாளனே நாராயணா நாராயணா.'

**பொழிப்புரை**

நாராயணனே! உலக உயிர்ப்பிராணிகளை யெல்லாம் ஈன்ற வனுமாகிய நீ உலகிற்குத் தந்தையாகவும், ஜீவராசிகள் உன் மக்களாகவும் விளங்குகின்றனர். அவ்வாறே வாழும் சான்றோர் கட்கு நோய் தராது அவர்களை ஆதரித்துப் போற்றும் வள்ளலே எம்மையும் ஆதரிப்பீராக என வேண்டுகின்றார் ஆசிரியர்.

74. 'கஞ்சப் பதந்தனை யங்ஙனே கட்டிக் காத்த வசத்தராய்
நெஞ்சத்த நாரிய னென்று தான் நியமித்து நித்திரை
கொள்ளுவர்
கொஞ்சத்தை நின்னதாக்குவாய் குணத்தை வாழக்குடி
யாக்குவாய்
நஞ்சத்தை யமிர்த மாக்குவாய் நாராயணா நாராயணா'

பொழிப்புரை

நாராயணு ! நின் தாமரை மலர் போன்ற திருவடிகளைக்கூடி வழிபட்டு வாழ்வோர் நெஞ்சத்தில் நீ குடிகொண்டு விளங்கு கின்றனே. தன் உள்ளத்தை நின்பால் சிறிதளவாயது கொடுத்து வாழ்பவர்கள் குடி சிறக்க நீ அருள் பாலிப்பாய். நஞ்சத்தினை அமிர்தமாக ஆக்கவல்ல நற்றிறன்மிக்க பெருமானே என நாரணனின் போற்றலை வியக்கின்ருர் ஆசிரியர்.

75. 'எழு நெட் டிருப்பருமேனி வந்தென் கைக் ககப்படுமென்று நான்
தழுவிக் கொளத் திரிகின்ற தெனச் சகல சராசர மாகி நின்
வழுவிக் கொடங்கிங் கொடியே வானுலக முன் னிலை அஞ்சியே
நழுவிக் கொடா திரிகின்றதே நாராயணு ! நாராயணு !

பொழிப்புரை

பெருமானே ! நாராயணு! தங்கள் பேருடலை யான் தழுவிக் கொண்டு பெருமகிழ்வு எய்துவதைப் போல இவ்வுலகில் உள்ள சராசரங்களும் வானிலுள்ள பொருள்களும் உங்கள் பருவுடலைத் தழுவிப் பேரானந்தம் எய்த விழைகின்றன. அவ்வாறு அவைகளது விழைவினை அறிந்து அவைகட்கு நழுவிவிடாதவாறு அவைகட்கு அகப்படும் எளிமையாய் என ஏந்தல் நாராயணனே விளிக்கின்ருர் ஆசிரியர்.

76. கண் போன்றவன் மகன் மற்றவன் கடுகொத்த பொய்க்கெது பத்ததோ
பண் பொன்றினுலுரை செய்துனைப் பல பொய் சொலாய்
மண் பொன்று நீர் முகமன்றியே வளியொன்றியே வருமென்று நின்
நண் பொன்றுமே தர வேணுமே நாராயணு – நாராயணு.

பொழிப்புரை

நாரணனே ! நினக்குக்கண் போன்ற அடியசர் எல்லாம் கடுவொத்து மாறினும், பலபொய்யுரைகளைக் கூறி நின்பால் கசடர்போல் விளையாடினும், மண் போலவும், தராதரம் பார்க்காத வளி போலவும் நீ நட்பொன்றனையே எண்ணி உன் அடியார்களைக் காத்து அருளவேண்டும் எனக்கூறி அழைக்கின்ருர் ஆசிரியர் இப்பாடலில்,

77. எனைக் காக்க நீவர வேறு மெனதருள் தாபமுண்டு தாய்
தனைக் காத்த வாகனமில்லையோ ததிசேனைக் காவலரில்லையோ
நினைக் காத்த சேடனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்
பிரானைக் காத்த மாருதியில்லையோ நாராயணா ! நாராயணா

பொழிப்புரை

இறைவா ! இராமாவதாரத்தில் இராமனாகத் தோன்றி இராவணனோடு போருடற்றியபோது தங்களைக் காத்த மாருதி இப்போது இல்லையோ ? பின்னர் ஆதிசேடனும் இப்போது இல்லையோ, உலகியலில் பேருறுகளில் அமிழ்ந்து கிடக்கும் என்னைத் தாங்கள் காத்து அருள விரைந்து வரவேண்டும் என வேண்டுகின்றார் ஆசிரியர்

78. போகேந்திரன் சிரமேந்தி நின் பொற்றேவி புலவரை எத்தியோ
யாகேந்திரன் உரை செய்வலி யடியேனை யேந்துகை வேண்டுமாய்
மாகேந்திரன்தன் தம்பியோ வடவேங்கடாசல வள்ளலே
நாகேந்து பன்னக மேந்தியோ நாராயணா! நாராயணா

பொழிப்புரை

வடவேங்கடத் துறையும் வள்ளலே ! நாகங்களையெல்லாம் தன்பாற் கொண்ட பல மலைகளை எல்லாம் ஏந்தி ஆயர்களைக் காத்த அருளாளா ! இந்திரனையும் மற்ற மண்ணுளோர், கற்றோர்களையும் ஆதரித்து அடிமைப்படுத்தும் என்னை நின் தொண்டருள் ஒருவனாக ஏற்று அருளவேண்டும் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார் இப்பாடலில்

79. 'ஊழில் பிறந்திடுமாறு நோயுடலைத் தொடாய் வகைதந்து காண
வாழிக்கு நாணய ரிந்திரன் மனுஷன் பதம் பெறு மிச்சையோ
ஆழிக்கை யான் கொடி மிக்க தென் றடியார் மிகப் பிறலாகுமோ
நாழிக் குடங் கலங் கொள்ளுமோ நாராயணா நாராயணா'.

பொழிப்புரை :

நாராயணா ! பலவாறாக ஊழி தோறும் பிறந்தும், இறந்தும் மாறிப் பிறந்தும் வருகின்ற நிலையினை எனக்கு உருவாக்கி விட்டீர்கள் இந்திரப்பதம் எய்தினும் மனித நிலை எய்தினும் சக்கராயுதத்தை

யுடைய நின் திருவடிகளை எங்களால் மறக்க இயலுமோ ? ஒருநாழி அளவு கொண்ட குடம் ஒரு கலம் அளவு கொள்ளுமோ ? ஆதலின் நும் அருளால் தான் நாங்கள் உய்வு பெறலாமேயன்றி வேறு எவ்வகையில் பெற இயலும் ? என ஆசிரியர் தெளிந்து ஆழியான் அருளைப்பெற விழைகின்றார்.

80. 'தனுவுக்குளே யுளாறு போசலுகைக்கு நாயகருன்னை நான்
அனுபவம் செலாவகை காட்டுவாய் பழிகிட்டதா நெறி
காட்டுவாய்
அனுவுத்த சுரரை யேத்தி நீ யடியேனை ஆளா யெனவே
நணுகிக்கொ டெதிரிகின்றதே நாராயணா நாராயணா'

**பொழிப்புரை :**

பெருமானே ! நாராயணா தனுவில்தன் ஆற்றலைக்காட்டும் பேராளா! உலக உயிரினங்களை யெல்லாம் ஆட்கொண்ட தாங்கள் என்னை மட்டும் அருளாது இருப்பது எக்காரணம் பற்றி ? என்னை நணுகி ஆதரித்து நின் அடியாருள் ஒருவனை ஆக்கிக் கொள்ள வேண்டும் என அன்புடன் இரக்கின்றார்.

81. 'கன்னிப் பெருங் கடலாடுவான் கமலத்திலே விளையாடுவான்
உன்னிக் கொடும்பகை யென்னநான் உகுமட்டும் நெஞ்சொடு
மிக்கிலேன்
நன்னிப் பயந் தெளிவித்திடா எல்லார்க்கு மீந்தென மட்டிலா
நன்னிக் குணம் பிடிபட்டுதே நாராயணா நாராயணா'.

**பொழிப்புரை**

நாராயணனே ! கன்னியர்களாகிய பெருங்கடலில் ஆய்ப் பாடியில் ஆடித் திளைத்த அம்மானே ! தாமரை மலரில் அமர்ந்துள்ள திருமகளோடு உறைபவனே! பகையினைக் கருதாது, அவர்களை அழித்த எளிய பிரானே! எனை நண்ணி என் குறை களைந்து என்னை அருளாயா? என அருளாளனைக் குறையிரக்கின்றார் ஆசிரியர்.

82. 'உடைகளைத்தா குழைக் கெயலைதா வுணச்சோறுதா பணப்
பேறுதா
கடைப் பூவடா வடைக் காயடா கறிக்காசடா கடைக்கொளேனு
கிடைக்கொடி வர முடிச் செதடா கிறுப்பா வொனு வெறுப்பார்
பொலாம்
நடைக் காசையா யிருந்தெனலோ நாராயணா நாராயணா'

**பொழிப்புரை**

உண்ணுஞ்சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்று நாராயணனாகிய பெருமானை உண்ணச்சோறும் உடுக்கக்கூறையும், பூவும், காயும் வேண்டிய மட்டும் இப்பூவுலக வாழ்வில் பூத்துமலர அருள்செய்ய வேண்டுகின்றார் ஆசிரியர்.

83. 'புட்புள்ளரயன் கொடியென்னவே பொன் பொன்னவன் கலை என்னவே
கட்புண்ட ரீகத் தவன் கண்ணெனவே கரைகின்றிலேன்
கட்புள்ளெனும் சமயத்திலே சலமண்டினென் சரண் எய்தவே
நட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.'

**பொழிப்புரை**

பறவைகட்கெல்லாம் தலைவனாகக் கருதப்படும் பட்சிராசனாகிய கருடக் கொடியுடையவனும்,பொன் ஆடை தரித்த பீதாம்பரதாரியும் தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடையவனுமாகிய நீ உன்னைச்சரண் எனப்பாதம் பணிந்து வந்து அண்டியவர்களை, அவர்களது நட்பினையோ, பகையினையோ கருதாது ஏற்றருள வேண்டும் எந்தையே என வேண்டுகிறார் ஆசிரியர்!

84. கச்சுப்பிதிர்ந் தெழு கொங்கையர் கடைவாள் விழிப்படைக் கொடியாய்
தச்சுக் கிடந்தது நெஞ்சிலே தனியம்புதைத் தாயாவரோ
பிச்சுத் தயாபரனை நீ பெருமந்திரந் தனி லாற்றுவாய்
நச்சுப் பெருஞ் சுதை வேலையாய்! நாராயணா - நாராயணா

**பொழிப்புரை**

பாற்கடலில பள்ளி கொண்ட பரமா! நச்சுவாயினையுடைய ஆதிசேடன் மீது அமர்ந்து அறிதுயில் கொள்ளும் அரிநாரணா! கச்சணிந்த கொங்கைமாதர் கடைக்கண் போன்ற சக்கரப்படையினை யுடையாய்! என் உள்ளம் அம்மாதரார் கண்ணம்பால் துளைக்கப் பட்டு வெய்துயிர்க்கும் போது நீ தனிவந்து என்னை ஆட்கொண்ட திறனை யான் எங்ஙனம் புகழ்வேன் என நாராயணனின் நற் புகழினைப் பாடுகின்றார் ஆசிரியர் இப்பாடலில்

85. எய்தா திருந்திட அம்மை நோவா ரிழிவாளர் போற்
பழிபாதகஞ்
செய்தா லிறுத்திட லன்றியே தெய்வந்தனைச் சிந்தை நிற்கவே
வையதானுதென விதனத்திலே விழியாமே வாயர் பாறுமோ
நையாதது மிப்பரிகாரமே நாராயணா ! நாராயணா

**பொழிப்புரை :**

உலகச் செய்திகளை எல்லாம் அறிந்து கொண்டு அறியாதவன் போல் நகைத்திருக்கும் நற்றவப் பெருமானே ! விமலா ! முகிலால் சூழப்பட்ட வானம் போல நின் முதுமையுறு அடியார் நோயால் சூழப்பட்டுள்ளனர். அந் நோய்களை நீக்கி அவர்களது இடர்களை வாய் என இன்முகத்துடன் வேண்டுகின்றார் ஆசிரியர்.

86. 'கமலத்தை வந்தயல் வண்டுணுங் கருதாது திரைக ளொக்கவே
அமலத்த நீரிடை வாழினு மது போலவே அமலாசெலாம்
நிமலபாதந் தொழு மூரிலே நிலைபெற் றிருந் துனை வத்தியேன்
நமலிக்குமோ முறைசெய்தவா நாராயணா நாராயணா'

**பொழிப்புரை :**

'நாராயணா வென்னா நாவென்ன நாவே' என்ற சொல்லை அறிந்தும் உன் நாமத்தினை உச்சரித்தால் என்நா வலிக்குமோ' என்னே என் அறியாமை என ஆசிரியர் நாராயணன் பால் நயமுறத் தன் குறையினை எடுத்துரைக்கின்றார் தாமரைப் பூக்களில் அயல் வண்டுகள் பலவந்து தேன் உண்டாலும் நீரோ, திரைகளோ மாறுபாடு எய்துவதில்லை. அதுபோல நின் மலமற்ற திருவடிகளைப் பலரும் தொழுதாலும் அடியேன் தொழா திருப்பது நன்மையாகுமா? என நயமுடன் உரைக்கின்றார் ஆசிரியர்.

87. 'என் மாடு விடுடன் பிள்ளை பெண்டுடன் காணி மண்ணென்
தேயமெனும்
தன் மானிடம் அறியாத பேத ளதாகுமோ துதயரா
வன் மாய மென்றது கண்டு நின் வடவேங்கடப்
பதிபெய்தினேம்
தன் மானிடம் நிலை நின்றதே நாராயணா !

**பொழிப்புரை**

என் மாடு, வீடு, பிள்ளை, மனைவி, காணி, நிலம் என்று எல்லாம் 'எனது' என உரிமை கொண்டாடும் அறியாதபேதை மானிடர்கள்

இவைகள் எல்லாம் மாயை என உணர்ந்த பின்னர் வடவேங்கடத் தலைமுறைகிய நின் பாதந் தலைப்பட்டு உய்ய விரைகின்றனர் நாராயணு ! அவ்வாறு உய்ய விழைவார்க்கு அருள் தந்து ஆட்கொள்க என ஆசிரியர் வேண்டுகின்ருர்.

88 பரலோகமும் பரதீபமும் பறமாயவும் மாபோகமுஞ்
சுரலோகமும் சுரதீபமும் சுரராசயவுஞ் சுரபாகமுந்
தரவே நின்றவையாதுந் திருவேங்கடந் துணையுள்ளதே
நரலோகமே மிகநன்றுகாண் நாராயணு நாராயணு'

### பொழிப்புரை

நாராயணனே ! இம்மண்ணுலகையன்றி வேறு உலகையான் விரும்பேன். இந்திரலோக மாளும் அச்சுவை பெற்ருலும் அது எனக்குச் சிறப்புத்தராது திருவேங்கடத்து நிலை நின்ற நின் திருவடியை வணங்கி வாழ்தலே எனக்குத் தலையாய செயலாகும், இதனை விடுத்து வாழ நேரிட்டால் எனக்கு நரலோகமே நல்லதாய் விடும். ஆகையால் பெருமானே நின் திருக்கோலத்தை என்றும் கண்டு மகிழ எனக்கு வாய்ப்பு அளியுங்கள் எனக்குறையிரக்கின்ருர் ஆசிரியர்.

89. 'அகலாத வன்பழி யெடார் அடியேனுடம் பிணிநோ யெலாங்
ககலாதுணைப் பலர போலவே கலிரசலிரங்கி யருளக் கூறுவாய்
குகவாயுதா சிறுகோவலா குறுவேதியா குலமன்னவா
நகவாளியில் பயிலன்னமே நாராயணு நாராயணு'

### பொழிப்புரை

வாளாயுதத்தைக் கையிலேந்திய பெருமானே ! ஆய்ச்சியர் நடுவண் ஆயனுய்த் திரிந்த மாயனே ! மாவலியின் ஆணவம் அடக்கிய குறு வேதியா! சீராமா! பாற்கடலில் துயிலும் பரந்தாமா! நாராயணு! பழி என்னைத் தொடராமலும், நோய் என்னுடலைப் பற்ருமலும் என்னை ஆட்கொண்டு அருள்வாய் என இரக்கின்ருர் ஆசிரியர்.

90. 'மீன் கூறு மங்கிடு பாதியான விருகரக்குள மபாசாளி கேள்
மான் கூறு வாயுத நயன மெல்வருவாசியும் பொரு பாசியோ
தேன் கூறும் கமழ் சாரமாய சிறு போகமோ கழல் சாரமல்
நான் கூறுவார் குருவத்தனே நாராயணு நாராயணு '

**பொழிப்புரை**

நாராயணனே! மரினையும், மானையும் ஒத்த கூரிய கண்களை யுடைய மாதரார் வலையில் சிக்கி வீழ்ந்து அழியாது அவர்களது சிறு போகத்தைப் பேரின்பமாகக் கருதாது நின்கழல் சார எனக்கு குருவாய் வருவாய் பெருமானே எனக் குறையிரக்கின்றார் ஆசிரியர்.

91\. 'புன் சொல்லிலே அகப்பட்டதும் போதாமலே வருமோ தனக்
கென் சொல்லிலே நன் வெளியே யாதோவெனக் கீயசமலே
நீயே
தென் சொல்லிலே வட சொல்லியே திருவாய்மொழி சதுர்
வேதமாம்
நன் சொல்லிலே விளையாடுவாய் நாராயணா! நாராயணா''

**பொழிப்புரை**

நாராயணா! நான் நின்னைப்புன் சொல் கூறிவழிபட்டு வாழ் கின்றேன் எனினும் நீ எனக்கு ஈயாமல் இருப்பது முறையாகாது. தென் செயலாகிய திருவாய் மொழியிலும் வடமொழி நான்கு வேதத்திலும் விளையாடும் நாராயணா! என்புன் சொல்லையும் பொறுத்தருள்க என வேண்டுகின்றார் ஆசிரியர்.

92\. 'மிறுக்கைத்திடா மென் கவியின் விளக்குக்கு நின்னருள்
நெய்யிடாய்
பொறுக்கத் தகாத வியூகம் புணகத் தகாதொரு பொறியே
குறுக்கிட்ட பாநடுக்கிட்ட நாளக் குலவாணர் திரளெலாம்
நறுக்கிக் கையைத் துணை விட்டவா நாராயணா நாராயணா

**பொழிப்புரை**

பெருமானே! நாராயணா! என் அன்புக்கவிகளாகிய விளக்கிற்கு நின்னருள் என்னும் நெய்யினைப் பெய்து என் பிழைகளைப் பொறுத்து என் பொய்யினை நீக்கி என்னை அருள்க. மேலும் இயம தூதர்கள் என்னை நெருக்கிப் பிடிக்கப் பாசக்கயிற்றோடு வரும்போது அதனை நறுக்கி விரட்டி என்னைப் பாதுகாக்க எனப் பரிந்துரைக்கின்றார் ஆசிரியர்.

93. மெலியாமை யுன் திருநாமமு மிகபோகமுந் திடதேகமும்
சலியாமை யுன் பகை நாகமுந் தன ராசியுந்தரச் செய்தருள்
கலியாணமும் பெற நீதருங் கடனெளி போற் பிணை யுன்னை நான்
நலியாமலே துணை கூறுவேன் நாராயணா நாராயணா

பொழிப்புரை

நாராயணா ! உன் துணையினை யான் என்றும் நலியாமல் பெற விழைகின்றேன். நான் திடமான உடல் பெற்று உன் திருநாமத்தினை அநவரதமும் சொல்லி வழிபட்டு அதனால் போகமும் புகழும் பெற்று இவ்வுலகில் இன்பங்களை இனிதே எனக்கு எய்த அருள் பாலிப்பாயாக என அருளிரக்கின்றார் ஆசிரியர்.

* 94. 'சமத்தெது நல்லறமெது தருந்தயையெது அருந்தவமே
அதுமே பதற்றேது வேற்படையெது காரணமெது
பூரணமெதுசங்
கமத்தெது ராகத்தெது செல்கதியெது நீ கதியோ நடுமா
நமத் தோதுவார் கை வாசனே நாராயணா நாராயணா'.

பொழிப்புரை

ஓம் நமோ நாராயணா என்று வழிபடுபவர்களை ஆதரிக்கும் அருளாளா ! நல்லறம், தீயறம் எதுவென்றும் தவம், தயை எதுவென்பதும், வேற்படை எது என்றும், காரணம் எது பூரணம் எது என்றும் நீ எனக்கு அறிவித்தருள வேண்டும் என இரந்து நிற்கின்றார் ஆசிரியர்.

★ இப்பாடலில் பல தொடரும், சொற்களும் தெளிவாக விளங்கவில்லை.

95. 'பித்தம் சயம் சொரி தேமல் கம்பிதம் ஈளை காமாலை பாண்டுன்
மத்தம் சளி நால்வகை வலி சூலை யோடிது விக்குதல்
உத்தம பனந் தலை நோவு மற்றுள நோயெல்லாந்
தொடராமலே
நத்தஞ் சாகற் கொடு காலனே நாராயணா நாராயணா !

**பொழிப்புரை**

பித்தமும், சளியும், தோலில் படரும் சொரியும், தேமலும், ஈளையும், காமாலையும். பாண்டுச் சோகையும், சளியும், பல்வகை வலியும் சூலையும், விக்கலும், தலை நோயும் முதலாகிய உடற் பிணிகள் அனைத்தும் என்னை நலிவுறுத்தாமலே உத்தமனே என்னை உய்யக்கொள்வாய் நாராயணா என வேண்டுகின்றார் ஆசிரியர், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

96. பிணி விட்டதே விதியானவை பிழைவிட்டதே சுகசீவியைப்
பணி விட்டதே நமனாரெனும் பகைவிட்டதே பலபூசலும்
தணிவிட்டதே அதிஞானமே தரவிட்டதே யுனையொத்தவாய்
நணிவிட்டதே யெனும் ஏட்டிலே நாராயணா நாராயணா !

**பொழிப்புரை**

நாராயணா ! உன் திருவடிகளைப் போற்றி உன் நாமத்தை இடையறாது உச்சரித்து யான் வழிபட்டு வந்தமையால் என்பிணி என்னை விட்டகன்றது. விதிகள் அனைத்தும் என்னை விட்டு நீங்கி விட்டது. நமனாரின் பகையும் தொலைந்தது. பல பூசல்கள் அகன்றன. ஆனால் அதிஞானம் என்னைக் கைகூடியது என ஆதங்கத்துடன் அறிவிக்கின்றார் ஆசிரியர்

97. வாய்ச் செய்தி யுன் புகழ் பாடவே வழிசெய்த புனங்கொடியென
தாய்ச் செய்த புனங் கொடு தந்தையைச் செய்த
புனமங்கொடியென்
பாய்ச் செய்த புனமங்கொடியென பதியச்செய்த புனமங்
கொடியென
நாய்ச் செய்த புனங் கோடிகாண் நாராயணா நாராயணா

**பொழிப்புரை**

நாராயணா ! யான் வாய் பெற்றதன் பயன் உன் புகழ்பாடவே என உணர்ந்தேன். என் தாய் தந்தையர் செய்த அனைத்திற்கும் யானே காரணமா யிருந்து வாழ்கின்றேன்—நாய் போன்ற நான் செய்தது பலகோடித் தவறுகள் எனினும் அவைகளையெல்லாம் பொறுத்தருளும் பெருமானே என வழிபடுகின்றார் ஆசிரியர்.

98. 'இற்கண்ணெலாம் நாராயணு எங்கெங்கணும் நாராயணு
சொற்கண்ணெலாம் நாராயணு தொழிலெங்கணும் நாராயணு
முற்கண்ணெலாம் நாராயணு முகமெங்கணும் நாராயணு
கற்கண்ணெலாம் நாராயணு நாராயணு

**பொழிப்புரை**

பெருங் கருணைப் பேராளா ! நாராயணு! எனக்கு அனைத்திலும் நின் திரு நாமமே புலப்படுகிறது. அகத்திலும் புறத்திலும் சொல்லிலும் செய்யும் தொழிலிலும், கல்லிலும், புல்லிலும், முகத்திலும், நகத்திலும் உன்னையே காணுகின்றேன் என்கிருர் ஆசிரியர். காணுமிடமெல்லாம் நின் திருவுருவும் திருநாமமுமே நீக்கமற நிறைந்துள்ளன என்கிருர் ஆசிரியர்.

99. 'தனிவாழி நின்பல நூலெலாந் தனிவாழி நின்னடியாரெலாம்
தனிவாழி நின் பலவைபவந் தனிவாழி நின் வடவேங்கடந்
தனிவாழி நின்கவி கற்றபேர் தனிவாழி நின்தாளெலாம்
தனிவாழி நின்பணிவலாளரும் நாராயணு நாராயணு

**பொழிப்புரை**

நாராயணு! உன்புகழ் கூறும் நூல்களெல்லாம் பல்லாண்டு வாழட்டும். நின்னடியாரெல்லாம் நின்றேடும் பல்லாண்டு வாழ்க. நின்புகழ் சிறந்து பரக்க வாழ்க. நீ குடியமர்ந்துள்ள கொற்றப் பதியாகிய திருவேங்கடம் பல்லாண்டுவாழி. நின்புகழ் கூறும் கவியினைக் கற்றவர்கள் பல்லாண்டு வாழ்க. நின் கொற்றமும் அதனை வழிபடுவோரும் பல்லாண்டு வாழ்க என இச் சதகத்தின் நிறைவுப் பாடலில் பல்லாண்டு கூறி முடிவுகட்டுகிருர் ஆசிரியர்.

100. திருப்பணி வேங்கடேசற் காற்று நாரண வென்றவா
நூறும் படிப்பவர் பன்னுவர் நூறும் புகுந்துலகாண்டுபொன்
பெறும் பிள்ளைபெறும் பெரும் பேறும் பெறப் பெறுவிப்பையே
நாறுந் துழாயணி மார்பனே நாராயணு ! நாராயணுய

**பொழிப்புரை**

இந்நாராயணா சதகம் என்னும் நூலைப்பயில்வார் பெறும்பயனை இப்பாடலில் கூறுகின்றார் ஆசிரியர்.

திருவேங்கடவற்கு ஆற்றும் இந்நாராயணா சதகத்தின் நூறு பாடல்களையும் கற்பவர்கள் நூறாண்டுவாழ்வார்கள். பொன்னும் பொருளும் பெறுவர். மக்கட்செல்வம் எய்தி எல்லாப்பெரும் பேறுகளையும் எய்துவர். நாறுந் துழப மாலையணிந்த நாராயணா ! இவ்வாறு அனைவர்க்கும் அருள் செய்க எனவேண்டுகிறா ஆசிரியர். இவ்வாறு அனைவருக்கும் ஆசிநல்க வேண்டி இறைவனைப் போற்றி இந்நூலை நிறைவு செய்கின்றார்.

விளம்பி ஸ்ரீ ஆவணிமீ 23ம் தி ஆதித்தவாரம் வெங்கடாத்தி செருவக்காரன் குமாரன்

திருமலையப்பன் நாராயணா சதகம் முடிந்தது

ஹரி ஓம்

# 45

# பிற் சேர்க்கை

## ஹரி ஓம்

கடலை பொரியவல் பயறு சீனி சர்க்கரையுங் கூதலி இளநீர்
விளாங்கனி கரும்பு தேங்காய்

வடை சீடை தோசை பணியாரம் எள்ளுருண்டை மாங்கனிச்
சாயந் தேன்பால் பாகுரசமும்

குடவயிறு நிறைய மிகுதி கொள்ள வேதரு வோம்
கொண்டெமது சிந்தை கொண்டருள் செய்வாய்

விட மருவு கண்டர் அருள் பாலனே தென்னளகை வெள்ளை
வாரண முக விநாயகனே சரணம்

பொழிப்புரை

இப் பிற் சேர்க்கையில் முன்னர் காப்புச் செய்யுள் சொன்ன கவிஞர் அக்காப்பினுல் நிறைவுறாது விக்கினம் நீக்கும் விக்கின கணபதியை இதன் மூலம் வேண்டுகின்றார். கடலைப் பொரி அவல் பயறு, சீனி, வெல்லச்சர்க்கரை, வாழைப்பழம், இளநீர், விளாங்கனி, கரும்பஞ்சாறு தேங்காய், வடை, சீடை, தோசை, பணியாரம், எள்ளுருண்டை, மாங்கனி, தெளிந்த பால், பாகுரசம் ஆகிய இனிய பொருள்களை உன் உள்ளக்கருத்தறிந்து நீ உவக்க உனக்குப் படைப்பேன் உன் பெரியவயிறு நிறைய நீ உண்டு உவக்கவேண்டும் பெருமானே ! நீர் எம் சிந்தையில் குடி கொண்டு அருள வேண்டும். நான் செய்யும் கடனைச் செய்கின்றேன். நீ செய்யும் கடன் என் சிந்தையில் குடி கொண்டு அருளுவதே என வேண்டுகின்றார். எடுத்த காரியம் இடையூறின்றி முடிய முதலில் காப்புச் செய்யுள் சொன்னார். நன்முறையில் நூல் முடிந்தமைக்காக கடையிலும் காப்புக் கூறி ஒரு புதுமையினைப் புகுத்துகின்றார் இந்நூலாசிரியர்.

எதிர்த்தவர்கள் மார்பாணி பகைத்தவர் குடாரி எப்போதும்
வணங்குதற்கு மெய்ப் பஞ்சகாயன்

மதித்தரசர் புகழ் கீர்த்தி தரு தியாக முகிலே மருவு முல்லை மலர்
மாலை மார்பா சிங்காரன்

வதித்து விறுவாரத்தில் பெறுகருட கேதனனே தூயன்
திருமலைராயன் பாலகன்சிலா

கதிக்கும் வடமலை கரும்பாயிரமகீபன் கணைத்துபுயத்துணை
வெங்கடாத்திரி பூபாலா

## ராசசா பேரில்

★ இப்பாடல் சொற்கள், எழுத்துக்கள் உருத்தெரியாளவில் சிதைந்து காணப் படுகின்றன.

இப்பாடல் நூலோடு இணைந்து பிற்சேர்க்கையாக பிரதியில் இடம் பெற்றுள்ளது.

மகுடமுடி விரிபடாட விசேடன மகிதலம் வானமுகடளவு மலையும்
மான சாகரங் குலைய ஒரு கோடி மதயானை
முன்னடக்க வாசி மாசூரர்மார் யாருதந்தாமென வாவி
வெகு கோடி மாவும் அச்சாரிகரொடியாம லொட
ளவங்கர் கொங்கண மாளுவர் கடனுகட கருணடர்
குடகங்கணர் அதிகாரி கோசலம் விசாலம்
காம பொதி மன்னராச மாந்தெச ராசரா அங்கையிற்
சிங்காடித்துங்க வெலபட்டயம் அலர்விற் பாசுதண்டம்
ஆடரவழலெனக்குதிர தெறி ஏந்தியே
அங்கெதனை குழவேகி விகடமோடு
வீங்கிட மிடிமிடெனச்சாட வெடியிடி முழக்கமிட
...... ஆர்ப்பட பெரிய மடமடென வீறுடனெதிர்ந்த
நரர்—வெறு மார்பில் உதிரங் குபீரென வெடாதுடக்
கொப்பளிப்ப மீதொடுதலை மாலை சடசடவென
அறுந்துருள மிகு கூளி பாடியாட சக
மாடு கிரிதுக்க பூதகணம் துர்க்கை தானை வணங்க
தந்திமீதேறியே தஞ்சை மா நகரமொரு
சதகோடி ராச விசயா கற்பனைப் பாகை
தெரியும் இராசராசரான சரபோசிராச திலகா
சங்கீத வித்வதயுணர் பூலோக விந்திரா சகலகுண நிபுணனே.